Registered as a Newspaper in Ceylon · விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி · National Tamil Daily
மலர் 18 · 18-11-66 · இதழ் 269
பராபவ ஜ.மாஜப் 24 ஐப்பசி 23 செவ்வாய்க்கிழமை

## பத்திரிகைகள் மீதும் நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

இனத் துவேஷத்தை ஆதரித்து அல்லது தூண்டுதல் செய்து செய்திகள் பிரசுரிக்கும் பத்திரிகைகள் மீது பீனல் சட்டத்தின் 120வது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குத் தொடரப்படும் என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜோன் அட்டிகலே 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இப்படியான செய்திகளை தமிழ்ப் பத்திரிகைகளோ அல்லது ஆங்கிலப் பத்திரிகைகளோ அல்லது சிங்களப் பத்திரிகைகளோ எந்தப் பத்திரிகை வெளியிட்டாலும் உடனடியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஜோன் அட்டிகலே தெரிவித்தார்.


பலாத்கார சம்பவங்களுக்கு இடமளிக்கக்கூடிய வகையில் இனத் துவேஷத்தைக் கிளப்புபவர்களை பீனல் சட்டத்தின் 150வது பிரிவிற்கிணங்க கைதுசெய்வதென்று கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொலிஸ் அதிகாரிகள் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

# வர்த்தக அமைச்சை ஜே. ஆர். ஏற்பார்?

## கல்வி அமைச்சிலும் மாற்றம் ஏற்படலாம்

கொழும்பு, திங்கள்

தேசிய அரசாங்கத்தின் மந்திரி சபையில் விரைவில் மாற்றம் ஏற்படும்பொழுது இப்பொழுது ராஜாங்க அமைச்சராகவுள்ள திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு மேலும் சில பொறுப்புக்கள் அளிக்கப்படக்கூடுமென்றும் இப்பொழுது வர்த்தக அமைச்சின் கீழுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், இறக்குமதி ஏற்றுமதி மேற்பார்வை ஆகிய பொறுப்பு ராஜாங்க அமைச்சிடம் ஒப்படைக்கப்படுமென்றும் பார்லிமெண்டரி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.



வர்த்தக அமைச்சில் மட்டுமல்லாது கல்வி அமைச்சிலும் மாற்றம் ஏற்படுமென்று அறியப்படுகிறது. அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் கல்வி அமைச்சரின் புதிய கல்வித் திட்டம் பற்றி அங்கத்தவர்கள் பலர் கண்டனம் தெரிவித்ததாகவும் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைப் பேசுவதற்கு விடாமலே அங்கத்தவர்கள் கல்வித் திட்டத்தின் அம்சங்கள் பற்றி வன்மையாகக் கண்டித்தனர் என்று தெரிகிறது.

தொழில் அமைச்சிலும் மாற்றம் செய்யப்படக்கூடுமென்பது அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தபோதிலும் அதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

இதேசமயம் கல்வி அமைச்சர் பதவியிலிருந்து திரு ஐ. எம் ஆர். ஏ. இரியகொல்லையையும் வர்த்தக அமைச்சர் பதவியிலிருந்து டாக்டர் எம். வி. பி. பீரிசையும் நீக்கிவிடவேண்டுமெனக் கோரி பிரதமருக்கு ஒரு மகஜர் சமர்ப்பிப்பதற்கு ஆளும் கட்சி அங்கத்தவர் சிலர் கையெழுத்துச் சேகரித்து வருகின்றனர். ஆளும்கட்சி அங்கத்தவர்களில் அறுபது பேருக்கு மேல் இதில் கைச்சாத்திடுவார்களென அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## 80,000 தமிழர் பௌத்த சமயத்தில் சேர விருப்பமாம்

கொழும்பு, திங்கள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களில் எண்பதினாயிரம் பேர் பௌத்த சமயத்தில் சேர்வதற்குத் தயாராக இருப்பதாக அகில இலங்கை பௌத்த சமய முன்னேற்றச்சங்கம் என்ற பெயரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ் சமூகத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்கள் என்றழைக்கப்படுபவர் உட்பட மற்றும் தமிழ்பேசும் இளைஞர் பௌத்த சமயத்தில் சேர ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அந்தச் சங்கம் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள ஒரு மகஜரில் தெரிவித்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தோட்டப் பகுதிகளிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனரென்றும் அந்த இடங்களில் பௌத்த தர்மத்தைப் பரப்புவதற்கு கலாசார இலாகா உதவி அளிக்க வேண்டுமென்றும் அந்த மகஜரில் சங்கம் கோரியுள்ளது.

## பொதுச் சேவை நியமனங்கள்

கொழும்பு, திங்கள்

பின்வருவோர் பொதுச் சேவையில் நியமனம் பெற்றுள்ளனர்;

திருவாளர்கள் கே. சிவானந்தன், ஈ. புலேந்திரன், எஸ். தியாகராஜா, எஸ். மகாதேவன், எஸ். திருநாவுக்கரசு, ஏ சண்முகராஜா, சி. ராமச்சந்திரன், ஏ சங்கநிதி, எஸ். குமாரசாமி, சி. அம்பிகாபதி, பி ராசநாயகம், எஸ். விநாயகமூர்த்தி, வி. கந்தசாமி.

## 'டெலிபோன்' ஒற்றுக் கேட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்'

கொழும்பு, திங்கள்

"பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் உதவி நீதிமந்திரி திரு. நைனுமரக்காருக்கு மிடையே நடைபெற்ற டெலிபோன் சம்பாஷணையை ஒற்றுக்கேட்ட தொலைபேசி தொடர்பு உத்தியோகத்தர்கள் இருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்" என்று தொலைபேசி ஒற்றுக்கேட்ட கமிஷனர் திரு. என் சிவஞானசுந்தரம் முன்னிலையில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஈ. என். விக்கிரமநாயக்கா இன்று சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

"கடந்தவருடம் மார்ச் மாதம் 28-ம் திகதி பிற்பகல் 2-24க்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கொழும்பிலிருந்து புத்தளத்திலுள்ள உதவி நீதிமந்திரியுடன் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்ததை தொலைபேசி மேற்பார்வையாளர் ஒருவர் பின்நிற்க தொலைபேசி தொடர்பு பெண் உத்தியோகஸ்தர் ஒருவர் ஒற்றுக் கேட்டார் என்றும் அவர் கூறினார்.

இதன் பின்னர் நடைபெற்ற விசாரணையின் போது இரு ஊழியர்களும் குற்றவாளிகளாகக் கண்டுபிடிக்கப்பட்டு வேலைநீக்கம் செய்யப்பட்டனர் என்றும் சாட்சியமளிக்கப்பட்டது.

## எந்த நிலைமையிலும் போராடுவார்களாம்

### பீலிக்ஸ் கூறுகிறார்

கொழும்பு, திங்கள்

சிங்கள இனம், கலாச்சாரம், மதம் ஆகியவற்றை எந்தச் சூழ்நிலையிலும் காப்பாற்றுவதற்காக போராடுவதில் எதிர்க்கட்சியினர் பின்நிற்கமாட்டார்கள் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி.யான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இன்று பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

டாக்டர் ரத்தினபாலாவினால் கொண்டுவரப்பட்ட ஒரு தனிப்பட்ட பிரேரணையின் போது திரு பீலிக்ஸ் டயஸ் உரைநிகழ்த்தினார்.

சிங்கள இனத்தின் மேன்மையைக் கருத்தில்கொண்டு நாமெல்லோரும் ஒன்றுசேரவேண்டும். சிங்கள இனத்தின் சரித்திரம் பாஷை, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் நமக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்துவிட வேண்டும். பெரும்பான்மையினரான நாம் நமக்குள் சண்டை போட்டுக்கொள்வது கவலைக்குரியது. இதனால் சிறுபான்மையினர் பெரிதும் பலனடைகிறார்கள். இவ்வாறு திரு. பீலிக்ஸ் டயஸ் கூறினார்.

உணவு, மற்றும் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதற்காக வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு நிலம்கொடுப்பதன் மூலம் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளவேண்டுமென்ற டாக்டர் ரத்தினபாலாவின் பிரேரணையின் மீது திரு. பீலிக்ஸ் பேசினார்.

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில், சமஷ்டிக்கட்சி ஆதரவு கிடைக்காததால் சுதந்திரக் கட்சியினர் அதை கண்டிக்கிறார்கள் என்றார்.

## யாழ் ரயில்நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் ரயில் போக்குவரத்து நேரம் முதலிய விபரங்களை அறிவிப்பதற்கான ஏற்பாட்டில் இன்று பரீட்சார்த்தமாக ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. இன்று இதன் மூலம் தமிழ்இசைத் தட்டுக்கள் ஒலிபரப்பப்பட்டன. மெயில் வண்டி வந்த போது அதுபற்றிய அறிவித்தலும் செய்யப்பட்டது.

## மாநகரசபை பட்ஜட்

திருநெல்வேலி, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய பட்ஜட் இம் மாதம் 14 திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. விசேஷ ஆணையாளர்களது கூட்டத்தில் பட்ஜட் பரிசீலனை செய்யப்பட்டபின்னரே இது ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம் (Ltd)
மேற்கொண்டு பலசினுசு C. W. E. புடவைகள்
இன்று விற்பனைக்குக் கிடைத்திருக்கின்றன.
287, ஸ்ரான்லி ரோட்டில் மொத்தமாகவும்
420, ஆஸ்பத்திரி வீதியில் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**மருந்து கலக்குவோர்**

மருந்து கலக்குவோராகப் பயிற்சி அளித்து வேலைக் கமர்த்த மணமாகாத ஆண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். Dr. K. Pathmanathan, Parvathy House, வல்வெட்டித்துறை... Pointpedro. 1477

## வாடகைக்கு

**வீடு:**

யாழ்ப்பாண இந்துக்கல்லூரிகளுக்குக் கிட்டவாக புதிய புது வீடு வாடகைக்கு உண்டு. 33, பிறவுண் வீதி, நீராவியடியில் விசாரிக்கவும். 1479

## கல்வி

**வகுப்புகள்:**

ஜே. எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்து ஜி. ஸி. ஈ. பரீட்சைக்குத் தோற்றுநவர்களுக்கும், தோற்றிச் சித்தியடையாதவர்களுக்கும் 1967 மார்கழி ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைவதற்கு சுருக்கெழுத்து, தட்டச்சு, வர்த்தகம், கணக்கியல், வர்த்தக கணிதம், பொருளாதாரம், தமிழ்ப்பாஷை, சமயம் 45 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் பிரத்தியேகமாய் கற்பிக்கப்படுகின்றன.

உடன் விண்ணப்பிக்கவும், வர்த்தகக் கல்லூரி ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை/வதிரி, கரவெட்டி. 1475

## வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

**கோழிக்குஞ்சுகள்:**

கோழிக்குஞ்சுகள் இனம் பார்த்து வாங்குவோர்க்கு ஓர் நற்செய்தி. சேவல்கள் கொடுக்கப்படும். விலைப்பட்டியல் எழுதுங்கள் அனுப்பப்படும். விலைப்பட்டியல் பதிவுசெய்து ஒருமாசத்துக்குள் குஞ்சுகள் அனுப்பப்படும். அருணா ஏஜென்சிஸ். அளவெட்டி. 1466

தீவுப்பகுதி பல. நோ. கூ. ச. சமாசத்திற்கு சொந்தமான 83 ஸ்ரீ 6089 இலக்கம்கொண்ட "செவலட்" லொறி விற்பனைக்குண்டு. இந்த லொறியை வாங்கவிரும்புவோர் சமாசத் தலைவருக்கு பதிவுத் தபால்மூலம் விண்ணப்பிக்கவும். தபால்உறையின் வலது பக்க மேல் மூலையில் "லொறி விற்பனைக்கு" என்று குறிப்பிடவும். வேலைநேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பம் 20-11-66-ல் முடிவடையும், தலைவர், தீவுப்பகுதி பல. நோ. கூ. ச. சமாசம், ஊர்காவற்றுறை. 1478

**உடுப்புகள்**

உங்கள் சிறுபிள்ளைகளுக்கும், பெரிய பெண்பிள்ளைகளுக்கும் நவீன முறையில் வேலைப்பாடுகள் அமைந்த உடுப்புகள்விற்பனைக்குண்டு. இன்னும் ஓடருக்கு உங்களுக்கு ஏற்றமுறையில் எந்த விதமான டிசைன் வேலைகளில் வேண்டுமானாலும்குறித்த தவணையில் குறைந்த செலவில்தைத்துக்கொடுப்போம் ஒரு முறை விஜயம்செய்து பாருங்கள். சேவ நிட்டையல் நிலையம், (டவுன்ஹால் முன்) 61, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1456

**REGAL—JAFFNA**

**NOW SHOWING**

Sidney Poitier
Shelly Winter
in
**A PATCH OF BLUE**

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்விப்பத்திர அறிவித்தல்

### சந்தைக்குத்தகை--1967

கீழ்வரும் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபைஆணையாளரால் 28-11-66ம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணமாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 28-11-66ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகளின்பெயர்கள்: | கேள்விப் பத்திரத்தின் விலை | கேள்விப்பத்திரங்களைப்பெறுவதற்காகச் செலுத்தப்பட வேண்டியபொறுப்புப் பணம் | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரின் உறுதிக்காகச் செலுத்த வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. பெரியகடை மரக்கறிச்சந்தை: | 10-00 | 250-00 | 250-00 |
| 2. சின்னக்கடைச் சந்தை: | 10-00 | 250-00 | 250-00 |
| 3. செங்குந்தர் சந்தை: | 10-00 | 250-00 | 250-00 |
| 4. அரியாலைச்சந்தை-பழையது: | 2-50 | 50-00 | —— |
| 5. அரியாலைச்சந்தை-புதியது: | 2-50 | 50-00 | —— |
| 6. முத்திரைச்சந்தை: | 2-50 | 50-00 | —— |
| 7. கொழும்புத்துறைச்சந்தை: | 2-50 | 50-00 | —— |
| 8. நாவாந்துறைச்சந்தை-பழையது: | 2-50 | 50-00 | —— |
| 9. நாவாந்துறைச்சந்தை-புதியது: | 2-50 | 50-00 | —— |
| 10. வாசையூர்ச் சந்தை: | 2-50 | 50-00 | —— |
| 11. பண்ணை மீன் சந்தை: | 2-50 | 50-00 | —— |
| 12. நாச்சிமார் கோவில் சந்தை: (வண்ணார்பண்ணைச்சந்தை) | 2-50 | 50-00 | —— |

இதர விபரங்களைக் கீழே கைச்சாத்திட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5-11-66. 1869

(கச்சன் செல்வராசா)
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

## இன்ஸ்பெக்டருக்கு சமன்ஸ்

மாவிட்டபுரம், திங்கள்

சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிளான கந்தசாமி என்பவர் ஆறுமுகம் ஐயாசாமி மீது குற்றம் சாட்டித் தொடரப் பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு டி.எஸ். திற்சிங்கா முன்னிலையில்எடுத்துக்கொள்ளப் பட்டபோது முக்கிய சாட்சியாகிய இன்ஸ்பெக்டர் திரு. ஜோர்ஜி விஜயசூரியா கோர்ட்டிற்கு வராததால் நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைத்து அத்திகதியில் கோர்ட்டில் ஆஜராகும்படி இன்ஸ்பெக்டருக்குச் சமன்ஸ் அனுப்ப உத்தரவிட்டார். வழக்காளி தரப்பில் வழக்கறிஞர் திரு. சி. எஸ். நாதனின் அனுசரணையுடன் திரு. ரகுபதி ஆஜரானார்.




## கொழும்பு

**செவ்வாய் 8 - 11 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கர்நாடக இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வண்டும்பயிர்.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-45 வீணை — ராஜலட்சுமி சுப்பிரமணியம், 7-15 யுனெஸ்கோ உரைச்சித்திரம், 7-30 குதூகலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம் — எஸ். நடராசா, 10-00 நேயர்விருப்பம்.

## "என்னைக் கண்டதும் எதிரி ஓடினார்"

மாவிட்டபுரம், திங்கள்

"நான் தேநீர்குடித்துவிட்டுதிரும்பிவரும்பொழுது எதிரி எனது விறகுகாலைக்குள்ளிருந்தமரப்பெட்டியின் பூட்டை இரும்புக்கம்பியால் உடைத்துக் கொண்டிருந்தார். அந்த மரப்பெட்டிக்குள் 430 ரூபாய் இருந்தது. என்னைக்கண்டதும்எதிரி ஓட்டம்பிடித்தார். நான் "கள்ளன் கள்ளன்" என்று குளறிக்கொண்டு துரத்தினேன். முதலில் ஒருவர் எதிரியைப் பிடித்தார் ஆனால் எதிரி பறித்துக்கொண்டு மீண்டும் ஓடினார். பின்னர் வேறு ஒருவர் எதிரியைப் பிடித்தார். நாங்கள் அவரை சுன்னாகம் பொலிஸில் ஒப்படைத்தோம்.

மூளாய்தெற்கைச்சேர்ந்த சின்னத்துரை சின்னராசாவின் விறகுகாலைக்குள் திருட முயன்றதாக அதே இடத்தைச்சேர்ந்தகதிரவேலுசின்னத்துரைமேல் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். திற்சிங்கா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டபோதுவழக்காளியான சின்னத்துரை சின்னராசா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறுகூறினார். நீதிபதி எதிரிக்கு சமன்ஸ் அனுப்ப உத்தரவிட்டு வழக்கை அடுத்தமாதம் 8ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 9 புதன் முதல்

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொட்டாஞ்சேனை) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |

### சிவாஜிகணேசன்-தேவிகா

சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி, நாகையா, ஏ. வி. எம். ராஜன் முதலியோர் நடிக்கும்

# ஆண்டவன் கட்டளை

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொட்டாஞ்சேனை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

எம். ஜி. ஆர். — கே. ஆர். விஜயா நடித்த

## பணம் படைத்தவன்

### யாதவா

(மூளாய்)

தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த

**எங்கவீட்டுப்பிள்ளை**

### நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி-சாவித்திரி நடித்த

**பாவமன்னிப்பு**

### ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன் — வசுந்தராதேவி நடித்த

**மங்கம்மா சபதம்**

(புதிய கொப்பி)

### மகாத்மா தியேட்டர்

(நெல்லியடி)

தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி நடித்த

**திருவிளையாடல்**

## 10 நாட்கள் மட்டும்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
சுன்னாகம்

# ஸ்ருடியோ பிறின்செஸ்

ஸ்தாபனத்தார் தங்கள் ஸ்ருடியோவில் எடுக்கும் புகைப்படங்களுக்கு
5-11-66 தொடக்கம் 14-11-66 வரை

# அரைச் சலார்

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

முக்கிய கவனிப்பு! 1-11-66 தொடக்கம் இந்த ஸ்ருடியோ எனது நிர்வாகத்தில் முன்போலவே திறமையாக நடாத்தப்பட்டு வருகின்றது என்பதை அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

கே. எம். நடராசா,
படம்பிடிப்பாளரும், உரிமையாளரும்,
சுன்னாகம்.

1367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலிய வெள்ளத்துக்கு 100 பேர் பலி;

## 10,000 பேர் வீடிழந்தனர்
## மீட்பு வேலைகளில் 1,00,000 பொலிசார் ஈடுபாடு

ரோம், நவ. 7

**இத்தாலியின் சில பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் நூற்றுக்கு மதிகமானவர்கள் உயிரிழந்தனர். சுமார் பத்தாயிரம் பேர் வீடிழந்தனர்.**

கடந்த நான்கு தினங்களாக இத்தாலியின் சில பகுதிகளில் கடுமையாகப் பெய்த மழையைத் தொடர்ந்து பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தினால் புளோரன்ஸ் நகரமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. புளோரன்ஸ் நகர மேயர் நேற்றுத் தெரிவிக்கையில் பல வருடங்களுக்கு பின்னர் ஏற்பட்டிருக்கும் இவ் வெள்ளத்தினால் ஏராளமான அளவு உயிர்ச்சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டிருக்கிறதென்றும் நகரிலுள்ள தேசிய நூல் நிலையத்திலிருந்த பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் வெள்ளத்தில் அள்ளப்பட்டதென்றும் கூறினார்.

கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி புளோரன்ஸ் நகரில் வெள்ளம் படிந்து வருவதாகத் தெரிய வருகிறது. வெள்ளத்தில் உயிரிழந்த சுமார் ஐம்பது பேரின் சடலங்கள் நேற்று சகதிகளுக்கிடையே இருந்து கண்டெடுக்கப்பட்டன. நிவாரண வேலைகளில் சுமாக ஒரு லட்சம் பொலிசாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு இத்தாலியும் மற்றும் சில பகுதிகளிலும் நிவாரண வேலைகள் செய்வதற்காக அறுபது லட்சம் பவுண் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஒரு சிறையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் எட்டுக்கைதிகள் தப்பியோடி விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 9 நாளுக்குப் பின்னர் வந்துசேர்ந்த ரயில் வண்டி

விஜயவாடா, நவ. 7

எஃகு ஆலை கோரிக்கை சம்பந்தமாக நடைபெற்று வந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவாகக் கடந்த ஒன்பது தினங்களாக ஓர் இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கல்கத்தா - சென்னை பிரயாணிகள் ரயில் நேற்று விஜயவாடா வந்தடைந்தது.

இந்த நீண்ட தூர பிரயாண ரயிலில் சுமார் 80 பிரயாணிகள் இருந்தனர். ரயில் விஜயவாடா வந்து சேர்ந்ததும் டாக்டர் குழுவொன்று பிரயாணிகளுக்கு தேவையான சிகிச்சை உதவிகள் அளித்தது. பிரயாணிகள் மிகவும் களைப்புற்ற நிலையில் காணப்பட்டனர். குழந்தைகளுக்கு பாலுணவு வழங்கப்பட்டது.

இந்த ரயில் கடந்த மாதம் 29-ம் திகதியிலிருந்து நேற்றுவரை ஒரே நிலையத்தில் தான் தங்கியிருந்தது.

## ரஷ்ய விமானம் விழுந்தது

நைஸ் (பிரான்ஸ்) நவ. 7

ரஷ்ய இலூசின் விமானமொன்று நேற்றிரவு பிரெஞ்சு ஆல்ப்ஸில் விழுந்து நொறுங்கியது. விமானத்தில் ஏழு சிப்பந்திகள் இருந்தனர். (பி.டி.ஐ)

## இயற்கை வளப்பும் செல்வமும் நிறைந்த ஆபிரிக்க நாடு

### விரைவில் சுதந்திரமடையும் சுவாஸிலாந்து

சுவாஸிலாந்து, நவ. 7

ஆபிரிக்காவின் சிறிய ஆனால் அழகிய நாடுகளில் ஒன்றான சுவாஸிலாந்து பூரண சுதந்திரத்தை நோக்கி விரைந்து செல்கிறது.

அடுத்த ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலையடுத்து, பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடான இந்நாட்டு மக்கள் சுயாட்சி பெறுவார்கள். செல்வம் நிறைந்த ஆனால் அரசியலில் பின்தங்கிய நாடொன்று பூரண தேசியம் அடைவதில் இது ஒரு முக்கிய கட்டமாகும்.

ஏறத்தாழ மூன்று வருடங்களில் இத்தகைய நாடு பூரண சுதந்திர நாடாகலாம்.

தென் ஆபிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் பாதுகாப்பு பிரதேசங்களில் இறுதியாகச் சுதந்திரம் பெறும் நாடு சுவாஸிலாந்தாகும்.

வேறு இரண்டு நாடுகள் கடந்த ஒக்டோபரில் சுதந்திரம் பெற்றன. பொட்ஸ்வானா என்றழைக்கப்படும் பெச்சுவானாலாந்தும், லிசோதோவென அழைக்கப்படும் பசுதோலாந்துமே அவையாகும்.

லிசோதோவிலும் பார்க்கச் சிறியதும், பெரிய பொட்ஸ்வானாவின் பருப்பத்தில் மிகச்சிறிய துண்டளவினதுமான சுவாஸிலாந்து இவ்விரு நாடுகளையும்விட செல்வமும் மகிழ்ச்சியும் நிரம்பியதாகும்.

பொட்ஸ்வானா, லிசோதோ இரண்டும் வறியனவும், இயற்கைவளம் குன்றியனவுமாகக் காணப்படும் போது, சுவாஸிலாந்தோ இரும்பு, கரி, தங்கம், சீனி, பருத்தி, புகையிலை ஆகியவை மலிந்த நாடாக விளங்குகிறது.

சுவாஸிலாந்தில் பெரும் பகுதி அருமையான சுவாத்தியமுடையது. பல சிற்றாறுகள், பேராறுகளுக்கு நீரூட்டுகின்றன.

சுவாஸிலாந்தில் ஆக 6,700 சதுரமைலே உள்ளதெனினும் அதில் பெரும் பகுதி அழகு நிறைந்ததே.

வனாந்தரத்தைத் தவிர, மற்றும்படி ஆபிரிக்கப் பிரதேசத்துக்கு உரித்தான மற்ற எல்லா அம்சங்களும் சுவாஸிலாந்தில் உள்ளன. உயர்ந்த மலைகளும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும், விரைந்து செல்லும் குறுகிய சிற்றாறுகளும், மலைச்சாரல்களும், உபஉஷ்ணப் பிரதேசப் பயிர்களும், பழமைகளும் சுவாஸிலாந்தில் பரவிக் கிடக்கின்றன.

பழைய காலத்திலிருந்த மாதிரியே இப்போதும் சுவாஸிலாந்தின் பெரும்பகுதி வாழ்ந்து வருகிறது. தனது நாட்டை வளமான நாடாக்க முடியுமென்ற உண்மையை உணர்ந்துள்ள நவீன சிந்தனை வாய்ந்த சுவாஸிகளுக்கு உள்ள பிரச்சினைகளில்

(6-ம் பக்கம் பார்க்க)

## கினி அதிபருக்கு விசேஷ விமானம்

### ஐ.அ.கு. அதிபர் அனுப்பினார்

அடிஸ் அபாபா, நவ 7

இங்கு நடைபெற்று வரும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன உச்சிமகாநாட்டில் கலந்துகொள்ள கினி அதிபர் செக்குட்டூரே விருப்பம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் கினி தலைநகர் கொனாக்றிக்கு விசேஷ விமானமொன்றை அனுப்பியுள்ளார்.

இந்த விமானத்தில் கினி அதிபர் செக்குட்டூரே அடிஸ் அபாபா வந்துசேருவார்.

அடிஸ் அபாபா மகாநாட்டின் ஆரம்பத்தில் கானா-கினி தகராறு காரணமாகத் தேக்கநிலை ஏற்பட்டிருந்த போதிலும் இப்போது சுமுகமான சூழ்நிலை தோன்றியிருப்பதாக பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். மகாநாடு தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

## சந்திரனை வட்டமிடும் அமெரிக்கச் செய்மதி

ஹவுஸ்டன், நவ. 7

சந்திரனை வட்டமிடுவதற்கு அமெரிக்கா அனுப்பிய "லூனா ஆர்பிட்டர்—2" என்ற செய்மதி திட்டமிட்டபடி சந்திரனை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

12 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட 850 ரூத்தல் நிறைகொண்ட இந்தச் செய்மதி வியாழக்கிழமை சந்திரனின் மேற்பரப்பை படம்பிடிக்கும்.

சந்திரனில் விண்வெளி வீரர்கள் இறங்குவதற்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்தச் செய்மதி அனுப்பப்பட்டுள்ளது. இச்செய்மதி பிடிக்கும் படங்கள் வியாழக்கிழமை இரவு பூமி வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வியட்னாம் நெருக்கடி தீர ரஷ்யா மத்தியஸ்தம்

### அதிபர் மார்க்கோஸ் கோருவார்

மணிலா, நவ. 6

வியட்னாம் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யா மத்தியஸ்தம் செய்ய வேண்டுமென்று தாம் கோரப் போவதாக பிலிப்பைன்ஸ் அதிபர் மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

"வியட்னாம் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் ரஷ்யா பலனுள்ள நடவடிக்கைகளை எடுக்க முடியும். மத்தியஸ்த யோசனைக்கு ரஷ்யா இணங்கினால் வியட்னாம் நெருக்கடியில் ஒரு திருப்பம் ஏற்படலாம் என்பது எமது நம்பிக்கை. இக் கோரிக்கை விரைவில் ரஷ்யாவிடம் சமர்ப்பிக்கப்படும்" என்றும் மார்க்கோஸ் [illegible]ளார்.

அக்டோபர் புரட்சி தினம்

## மாஸ்கோ கூட்டத்திலிருந்து சீனர் வெளிநடப்பு

### வியட்னாம் நெருக்கடியில் பீக்கிங் போக்குக்கு கண்டனம்

மாஸ்கோ, நவ. 7

**அக்டோபர் புரட்சியின் 49-வது ஆண்டு தினத்தையொட்டி மாஸ்கோவில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கலந்துகொண்ட சீன ராஜதந்திரிகள் ஒரு கட்டத்தில் மிகவும் ஆத்திரம் கொண்டவர்களாக கூட்டத்திலிருந்து வெளியேறினர்.**

இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய ரஷ்ய பேச்சாளர் ஒருவர், வியட்னாம் நெருக்கடியில் சீனாவின் போக்கை வன்மையாகக் கண்டித்திருந்தார். இதனை ஆட்சேபித்தே சீன ராஜதந்திரிகள் வெளிநடப்புச் செய்தனர்.

வியட்னாம் நெருக்கடியில் பீகிங்கின் நடவடிக்கைகள் அமெரிக்காவுக்குச் சாதகமாகவிருக்கின்றன என்றும் ரஷ்யாவுடன் ஒத்துழைக்காமல் சீனா தன்னிஷ்டத்துக்குச் செல்கிறதென்றும் இந்தப் பேச்சாளர் கூறினார்.

வியட்னாமில் அமைதி நிலவாதவரைக்கும் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் நல்லுறவுகள் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

**சீனா வாழ்த்து**

அக்டோபர் புரட்சி தினத்தையொட்டி சீனா அனுப்பிய செய்தியில், ரஷ்யமக்களுக்கு தங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது. இச்செய்தியில் ரஷ்ய அரசாங்கத்தைப் பற்றியோ ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## "நிலையான அமைதிக்கு ஒத்துழைப்போம்"-ஜோன்ஸன்

அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் ரஷ்யத் தலைவர்களுக்கு அனுப்பிய வாழ்த்துச்செய்தியில் நிலையான உலக அமைதிக்கு ஒத்துழைப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

[illegible] இருநாட்டு மக்க[illegible] [illegible] அமைதியை ஏற்படுத்துவதில் விரைவில் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்" என்றும் அதிபர் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

பல நாட்டுத் தலைவர்கள் ரஷ்யத்தலைவர்களுக்கு வாழ்த்துக்கள் அனுப்பியுள்ளனர்.

## கொளுத்தும் வெய்யிலில்......

ஸாம்பியா, நவ. 7

கொளுத்தும் வெய்யிலில் 90 டிக்கிரி இருக்கும் போல் சியாம்பொம்ப்வே பாரமான உடை உடுத்திருந்தது போல் தெரிந்தது. சந்தேகமுற்ற கடைச் சிப்பந்தி அவரது உடையைக் களையச் சொன்னார்.

சியாம்பொம்ப்வே நான்கு சோடி நீட்டுக் காற்சட்டையும், ஐந்து சோடி உள் காற்சட்டையும் அணிந்திருக்கக் காணப்பட்டார்.

கடைப் பொருளைக் களவாடியதற்காக அவர் கைது செய்யப்பட்டார். (பி. டி. ஐ.)

## சிவில் உரிமைத் தலைவர் கைது

செல்மா (அலபாமா), நவ. 7

தற்போதைய நீக்ரோ கிளர்ச்சிக்குரனான 'கறுப்பு சக்தி'க்குக் காரணமானவரும், சிவில் உரிமைத்தலைவருமான திரு. ஸ்டாக்லி கார்மைக்கேல் சிவில் உரிமை ஆர்ப்பாட்டமொன்றின் போது நேற்றுக்கைது செய்யப்பட்டார். கலகமூட்ட முயன்றார் என்பதே குற்றச்சாட்டாகும்.

(பி. டி. ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒவ்வொரு மாதமும் உங்கள் வருமானத்தில் இரண்டு சதவீதம் முதல் பத்துச் சதவீதம் வரை தருமம் செய்யுங்கள். உங்களிடமுள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். உலகமனைத்தும் உங்கள் குடும்பமாகக் கருதுங்கள். சுயநலத்தை அகற்றுங்கள்.

— சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone 1389

சர்ப்பாரை பராபவ ஆண்டு ஐப்பசி மீ 23 உ (8-11-66)


## வரவேற்கத் தக்க நடவடிக்கை

இன, மத, வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிட்டு நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி அமைதியைக் குலைக்க முயற்சி செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுபற்றி பொலிஸ் அதிபர் தமது உயர்தர அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து துவேஷத்தைத் தூண்டுவோர்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை கள்பற்றித் தீர்மானித்துள்ளார். சில தினங்களுக்கு முன் இதே பத்தியில் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டும் முயற்சியில் சிலர் மீண்டும் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டு, அந்த முயற்சிகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமென்றும் நாம் எச்சரித்திருந்தோம். பொலிஸ் அதிபர் நிலைமையை உணர்ந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருப்பது கண்டு, நாட்டின் அமைதியை விரும்பும் மக்களுடன் நாமும் அவரைப் பாராட்டுகிறோம்; ஆறுதலடைகிறோம்.

சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் 'இருள் சூழ்ந்த காலம்' எனக் கருதப்படும் 1958-ம் வருட கோரச் சம்பவங்களைக் கண்டு, கேட்டு அறிந்தவர்களும்கூட பதவிவெறி அதிகாரவெறி காரணமாக அவற்றை மறந்து மீண்டும் நாட்டை அந்தகார இருளில் மூழ்கச் செய்வதற்குக் கங்கணம் கட்டுகின்றனர். இதற்குச் சில பத்திரிகைகளும் 'தாளம்' போடுகின்றன. வகுப்புவாதம் சிறுபான்மை இனத்தவரிடமிருந்து வந்தாலும்சரி பெரும்பான்மை இனத்தவரிடமிருந்து வந்தாலும் சரி, நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு ஆரம்பத்திலேயே அதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும். பொலிஸ் அதிபர் திரு. ஜோன் அட்டிகலே இப்பொழுது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 1958-ம் ஆண்டிலேயே எடுக்கப்பட்டிருந்தால் அநியாயமாக பலரின் உயிர் பலியாகியிருக்காது; நாடும் சீரழிந்திருக்காது. துவேஷத்தைத் தூண்டுபவர்மீதும் அதற்குத் 'தாளம்' போடும் பத்திரிகைகள் மீதும் பொலிசார் நடவடிக்கை எடுக்கவிருப்பது பாராட்ட வேண்டிய, வரவேற்கக்கூடிய, மகிழ்ச்சியளிக்கக் கூடிய விஷயமாகும்; என்றாலும் பொலிசாரின் நடவடிக்கைகளும் சட்டரீதியான நடவடிக்கைகளும் மட்டும் வகுப்புத் துவேஷ முயற்சியை முற்றாக நீக்கி அமைதியை ஏற்படுத்திவிடுமென்று எதிர்பார்க்க முடியாது. மக்களின் மனமாற்றமும் சமூக ஐக்கியத்தின் அவசியத்தைப்பற்றிய உணர்வும் அவசியம் தேவை.

தேசிய கல்விச்சபை அங்கத்தவர் டாக்டர் ஈ. டபிள்யு. அதிகாரம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். பேராதனைப் பல்கலைக்கழக வெளித்த மாணவர் மத்தியில் டாக்டர் அதிகாரம் பேசுகையில், "நான் முன்பு ஒரு சிங்களவனாக இருந்தேன். இப்பொழுது அதைவிட்டுவிட்டேன்" என்று குறிப்பிட்டதுடன் இனப் பாகுபாட்டை, இன பேதத்தைக் கிளப்பி விடுபவர்களின் கற்பனையில்தான் சிங்களவன், தமிழன், சோனகன், பறங்கி என்ற வேற்றுமை எழுகின்றது என்றும் குழந்தை பிறக்கும் பொழுது இந்த வேறுபாடுகளுடனா பிறக்கின்றது என்றும் கேட்டார். தேசிய ஐக்கியத்தின் அவசியத்தை இவ்வளவு தெளிவாக, துணிச்சலாக எடுத்துக் கூறுவதற்கு டாக்டர் அதிகாரம் போன்று இன்னும் சிலர் இந்த நாட்டிலிருந்தால், பொலிஸ் அதிபர் உயர் அதிகாரிகளின் மகாநாட்டைக் கூட்டி, இனத் துவேஷத்தைக் கிளப்புவோர்மீது நடவடிக்கை எடுப்பதுபற்றி ஆராய வேண்டியேற்பட்டிருக்காது. இனத் துவேஷத்தைக் கிளப்புவோர்மீது நடவடிக்கை எடுத்து நாட்டின் அமைதியையும் சட்டத்தையும், ஒழுங்கையும், பாதுகாக்கவும் பொலிசார் நடவடிக்கை எடுக்கும் அதேசமயம் டாக்டர் அதிகாரம் போன்ற விரிந்த மனப்பான்மையுடைய படித்த அறிஞர்கள் தேசிய ஐக்கியத்தின் அவசியத்தைப் பொது மக்களுக்கு உணர்த்த வேண்டும். பல்வேறு சமூகத்தையும் சேர்ந்த இவர்கள் ஒரு குழு அமைத்து நாட்டின் பல பல பாகங்களுக்கும் சென்று இந்த அமைதிப் பணியைச் செய்தால் பயன் கிடைக்காமல் போகாது.



## இன்று 65 வயதாகும் ஜி.ஜி.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு இன்று 65 வயதாகிறது. திரு. பொன்னம்பலம் கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் பயிலும் பொழுது பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று பின்னர் லண்டன் சென்று சட்டப் பரீட்சையில் சித்தியெய்தினார்.

லண்டனிலிருந்து திரும்பிய இரண்டு வருடத்திற்குள் சட்டசபைத் தேர்தலில் மன்னார் முல்லைத்தீவுத் தொகுதியில் புறக்டர் ஆனந்தம் என்பவருடன் போட்டியிட்டு நூற்றுக்குக் குறைவான வாக்குகளால் தோல்வியுற்றார். பின்னர் 1933-ம் ஆண்டில் பருத்தித்துறையில் திரு. ஸ்ரீ பத்மநாதன் என்பவருடன் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினார் 1936-ம் ஆண்டிலும் அதே தொகுதியில் திரு. பாலசிங்கம் என்பவருடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தற்காலிக மந்திரியாக இருந்த காலத்தில் அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் பற்றி மகஜர் ஒன்று சமர்ப்பித்ததுமல்லாமல் லண்டனுக்குத் தமது சொந்தச் செலவில் சென்று அப்பொழுது கவர்னராயிருந்த கலடிக்கொற்றின் சிபார்சுகளை முதலில் சட்ட சபையில் விவாதிக்காது பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடாதென எடுத்துக் கூறினார். பின்னர் இவ்விஷயம் சட்டசபையில் விவாதிக்கப்பட்டபோது தொடர்ந்து மூன்று நாட்கள் திரு. பொன்னம்பலம் சிறுபான்மை மக்களின் உரிமைகளை எடுத்துத்தெளிவாக விளக்கினார். சோல்பரிக் கமிஷன் முன்னர் திரு. பொன்னம்பலம் சாட்சியமளித்து தற்பொழுது அரசியல் சட்டத்திலுள்ள 29-ம் ஷரத்து இருக்கவேண்டிய அத்தியாவசியத்தை வற்புறுத்தினார்.

1947-ம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியை அமைத்து 1947-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்குமாகாணங்களிலுள்ள எல்லாத் தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்தி ஒரு தொகுதி தவிர்ந்த ஏனைய தொகுதிகளிலெல்லாம் வெற்றிபெற்றார்.

1948-ம் ஆண்டில் இவருக்கு கே. ஸி. பட்டம் கிடைத்தது. தேர்தலின் பின்னர் ஓராண்டு வரை திரு. பொன்னம்பலம் எதிர்க்கட்சியிலிருந்து பின்னர் அரசாங்கத்தில் சேர்ந்து கைத்தொழில் மீன்பிடி மந்திரியாகக் கடமையாற்றி 1954-ம் ஆண்டு மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்தார். இவர் மந்திரியாக இருந்த காலத்தில் காங்கேசன்துறைசிமெந்து தொழிற்சாலை, பரந்தன் ரசாயன தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை, சீதுவ எண்ணெய் கொழும்புத் தொழிற்சாலை, ஜிந்தோட்ட மரத் தொழிற்சாலை, நீர்கொழும்பு மட்பாண்டத் தொழிற்சாலை, மட்டக்குளியாசப்பாத்துத்தொழிற்சாலை முதலியன நிறுவப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது சட்ட சபைக்காலந் தொட்டு 1960-ம் ஆண்டு வரை தொடர்ந்து பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த தமிழர் என்ற பெருமை இவரையே சார்ந்ததாகும்.

1960-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 200 க்குமதிகமான வாக்குகளால் தோல்வியடைந்த பின்னர் அரசியலில் பங்குபற்றாது சில காலம் இருந்தார். பின்னர் 1965-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றார். இதன் பின்னர் அரசாங்கம் இவரை இருமுறை ஐ. நா. சபையின் இலங்கைக்குழுவிற்குத் தலைவராகத் தெரிந்து அனுப்பியிருந்தது.

சிறந்த பேச்சாளரும், சட்ட வல்லுநரும் - நிர்வாகத் திறமையுமுள்ள இவருக்கு 65-வது பிறந்த தினப் பரிசாக மீண்டும் மந்திரிப் பதவி கிடைக்குமா?

மலைநாட்டில்

## கல்வி வசதி கிடையாது கஷ்டப்படும் குழந்தைகள்

—நமது நிருபர்—

கொஸ்லாந்தை, திங்கள்

மலைநாட்டின் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் கல்வி வசதியின்றிப் பெருந் துன்பத்துக்காளாகிவருகின்றனர்.

அட்டன் மாவட்டத்தில் நோட்டன், டிக்கோயா, வட்டகொடை, கொட்டகலைப் பகுதிகளில் உள்ள பல தோட்டங்களைச்சேர்ந்த 3000 குழந்தைகள் பாடசாலை வசதியில்லாமல் அவதிப்படுகிறார்கள். இத்தொகைவருடா வருடம் அதிகரித்த வண்ணமாக இருக்கிறது.

அட்டனில் உள்ள இரு தமிழ் பாடசாலைகளைத்தவிர இப்பகுதியில் வேறு பாடசாலைகள் இல்லாத காரணத்தினால் இவ்விரு பாடசாலைகளிலும் சுமார் 1000 குழந்தைகளுக்கு மேல் படிக்க கட்டட வசதியோ, உபகரணங்கள் வசதியோ கிடையாது.

பசறை மாவட்டத்தில் உள்ள நமுனுகல வட்டாரத்தில் உள்ள 10 தோட்டங்களில் சுமார் 2000 பேர் கல்வி வசதி இல்லாமல் கஷ்டமுறுகின்றனர். நமுனுகலையிலுள்ள சிங்கள மகாவித்தியாலயத்தில் மாலை நேரத்திலாவது தமிழ்ப்பிரிவொன்றை ஏற்படுத்தித்தருமாறு கேட்[illegible]

நமுனுகலையிலுள்ள தமிழ்ப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதென்றால் 20 மைல் தூரம்நடந்துசென்று பதுளை பண்டாரவளை போன்ற நகரங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது.

பண்டாரவளை மாவட்டத்திலுள்ள பூனாகலை பகுதியைச் சேர்ந்த 15 தோட்டப் பாடசாலைப் பிள்ளைகள் 5-ம் வகுப்புக்கு மேல்படிக்க ஒரு பாடசாலை இல்லாது மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

இக்குறைகளை நீக்குமாறு மலைநாட்டு எம். பி.க்களான திரு. தொண்டமானும். திரு. வி. அண்ணாமலையும் கல்வி மந்திரியை பலதடவை கேட்டுக்கொண்டும் இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அடுத்த வருட ஆரம்பத்தில் பிள்ளைகளைபாடசாலைக்கு சேர்க்கும்போது, தோட்டப் பிள்ளைகளுக்கு மீண்டும் இடம்கிடைக்காமல் போகுமோவென இப்பகுதிப் பெற்றோர் கவலைப்படுகின்றனர்.

## 'ஈழத்துஇலக்கியத்தை ஆதரியுங்கள்'

கொஸ்லாந்தை, திங்.

"வெளிநாட்டு இலக்கியங்களுக்கு ஆதரவு கொடுப்பதுபோல் உள்நாட்டு இலக்கியங்களுக்கும் போதிய ஆதரவுகொடுக்க வேண்டும். வாசகர்களின் ஆதரவுகிடைக்காவிட்டால் ஈழத்து இலக்கியங்கள்மறைந்து விடலாம் என்று ருகலையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் திரு. மரியசாசன் "ஈழத்து இலக்கியப்போக்கு" பற்றிப்பேசும் போது கவலை தெரிவித்தார்.

திரு. வாமதேவன், செல்வி நயீமா ஏ. பஷீர் ஆகியோரும் உரை நிகழ்த்திய இவ்விழாவுக்குதிரு. ஒ. கடுணாகரன் தலைமைவகித்தார். ருகலை சதாலிங்கம் கோஷ்டியினர் நடத்திய "தெய்வத்தோட்டத்திலே" என்னும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி பலரதும் பாராட்டைப் பெற்றுக்கொண்டது.

## அக்டோபர் புரட்சி தினம்

யாழ்ப்பாணம், செவ்.

அக்டோபர் புரட்சி தினக் [illegible]ம் இன்று மாலை இலங்கை தொழிற் சங்க சம்மேளனக் காரியாலயத்தில் டாக்டர் சு.வே. சீனிவாசகம் தலைமையில் நடைபெறும்.

## நாட்டிலும் நகரிலும்

"என்றை சீவியத்திலை இப்படி நடக்கிறதை நான் ஒருநாளும் காணேல்லை, மேனை. எப்பவாவது ஒரு நாள் ஆராவது ஒருத்தன் கழுத்திலே கயிறு போட்டிட்டான் எண்டு கேள்விப்படுவன். அது ஆடிக்கொருக்கால் ஆவணிக்கொருக்கால். இப்ப பேப்பரைத் திறந்தால் முப்பத்திரண்டு 'சாவு' கள் தான் கிடக்கிறது. அதுவும் என்ன மாதிரி சாவுகள்? எல்லாம் ஆச்சரியமான அகாலமரணங்களாய்க்கிடக்குது. பின்னேரம் தாலிகட்டப் போறவன் மத்தியானம் சறுக்கி விழுந்து சாகிறான். பத்து வருடம் மறியல் இருந்திட்டு வீட்டை போறவன் வழியிலை பஸ்ஸுக்ுள்ளை செத்துப் போறான். வரியம் முன்னூற்றறுபத்தைஞ்சு நாளும் மரமேறுகிறவன் கைதவறி விழுந்து சாகிறான். ரயிலுகள் தண்டவாளம் விலகிப் போய் சனங்களுக்குள்ளை உழுது பத்து பதினைஞ்சு பேரை பேயடித்த மாதிரிக் கொல்லுது. சுவீப்பு டிக்கட்டை பெண்டாட்டி எடுத்துப்போட்டாள் எண்டிட்டு ஒருத்தன் மேல் வீட்டிலையிருந்து விழுந்து நொருங்குகிறான். இனிமாவுக்குப் போக விடேல்லையெண்டு ஒருத்தன் நஞ்சைக் குடிக்கிறான். தாய் ஏசிப் போட்டாள் எண்டு குமரி ஒருத்தி மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தி சாகிறாள். இதெல்லாம் என்னத்துக்காக எண்டு விளங்கேல்லை, மேனை" என்றார் முருகம்மாள்.

'இதெல்லாம் கிரகங்களின் கோளாறுகள்' என்றார் சாஸ்திரி சிவசம்பர்.

'சும்மா போங்காணும். எல்லாத்துக்கும் கிரகங்கள் மேலை பாரத்தை போட்டுதான் உமக்குத் தெரியும். அது சரி, உமக்குப் பிழைப்பு வேணும் தானே' என்று ஒரு போடு போட்டார் கனகலிங்கம்.

"உலகத்திலை சனத்தொகை பெருகிவிட்டுது, பூமாதேவி பாரம் பொறுக்காமல் கூச்சல் போடுகிறாள். ஆனபடியால்தான் மகாவிட்டுணு எத்தினை வழியாலை மனிசரைக் குறைக்க முடியுமோ அத்தனை வழியாலை குறைக்கிறார்", என்றார் பூசாரியார்.

"சங்கதி என்னெண்டு விளங்காமல் சும்மா சாமியிலும் சோதிடத்திலும் ஏன்பாபாரத்தைப் போடுகிறீர்கள்! இந்த மாதிரி கோர மரணங்கள் இந்த இலங்கையிலை மட்டுமல்ல, உலகம் எங்கும்தான் நடக்குது. இஞ்சையுள்ள பேப்பர்காரர்கள் இதுகள்தான் சனங்களுக்குபிடிச்ச புதினம் என்று நினைச்சு வைச்சு வெளுத்துவாங்கிறார்கள். சனங்களும் அதுக்கேத்தாப் போலை 'திடீர் சாவு',

(5-ம் பக்கம் பார்க்க)

# மலைநாட்டு மாணவருக்கு தனிபல்கலைக்கழகம்

## இ.தொ.கா.கோரியதாக ஜெகநாதஸன் தகவல்

கொஸ்லாந்தை, திங்கள்: ''இலங்கையில் உள்ள இந்திய தோட்டக் குழந்தைகளின் போதனா மொழி தமிழ் தான். சிங்களத்தை இரண்டாவது மொழியாக அவர்களுக்குக்கற்பிக்கவேண்டும்'' என்று இ. தொ. கா. உறுப்பினரும், செனட்டருமான திரு. ஜெகநாதசன் தெரிவித்துள்ளார்.

''சிங்களத்தைக் கட்டாயமாகத் திணிக்காமல் இரண்டாவதுமொழியாகக் கற்பித்தால், மலைநாட்டினர் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். ஆங்கிலத்தையும்ஒரு பாடமாகக்கற்பிக்க வேண்டும். மலைநாட்டுப் பிள்ளைகளின் பல்கலைக்கழகப் பிரவேசம் வரை தடையில்லாமல் இருக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். மலைநாட்டுக் குழந்தைகளின் போதனா மொழி தமிழ் தான் என்பதை இ. தொ. காங்கிரஸ் எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ளது இதுவே வருங்காலத்திலும் எமது உறுதியான கொள்கையாகவிருக்கும். மலைநாட்டு மாணவர்களுக்கெனத் தனியாக ஒரு சர்வகலாசாலை வேண்டுமென்று இ. தொ. கா. அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது'' என்றும் அவர் தெரிவித்தார்.

## தேயிலை விலை வீழ்ச்சி: பல தோட்டங்கள் பாதிப்பு

கொஸ்லாந்தை, திங். உலகப்பொதுச்சந்தையில் இலங்கைத் தேயிலைக்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சியால் இங்குள்ள பல தேயிலைத் தோட்டங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சொந்தத் தோட்டம் இல்லாது தொழிற்சாலைகளை மட்டும் வைத்துக்கொண்டு சிறு தோட்டங்களில் இருந்து கிடைக்கும் கொழுந்தை அரைத்து விற்று வரும் முதலாளிமார்கள் தேயிலை விலை வீழ்ச்சியால் தொழிற்சாலையை மூடும் அளவுக்கு வந்துள்ளனர்.

ஒரு ருத்தல் பச்சைக் கொழுந்தை 40, 50 சதத்துக்கு விலைகொடுத்துவாங்கி அரைத்த தொழிற்சாலை முதலாளிமார்கள் இன்று 5, 10 சதத்திற்குமேல் கொடுக்கமுடியாதென கூறுகிறார்கள். இச்சிறு தொகையைப் பெறுவதால் தோட்டங்களைப் பராமரிக்கமுடியாது என்று சிறு தோட்ட முதலாளிகள் கூறிவருகின்றனர். இதன் விளைவாக 50 சிறு தோட்டங்கள் ஊவா மாகாணத்தில் மட்டும் மூடப்படும் என்று தெரிகிறது.

பெரிய கம்பெனி தோட்டங்களில் கிழமைக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களாக வேலை குறைக்கப்பட்டுள்ளது. கொழுந்து பறிப்பதைத் தவிர மற்றைய வேலைகளைச் செய்வதை தோட்ட நிர்வாகம் நிறுத்திவைத்துள்ளது.

இலங்கைத் தேயிலையின் விலை உடன்உயராவிட்டால் இலங்கை தோட்டத்தொழிலாளர்களின் நிலையும் தோட்டங்களின் நிலையும் அதிகம் பாதிக்கப்படுமென அஞ்சப்படுகிறது.

## "நான் கத்தியபொழுது எதிரி கழுத்தை நெரித்தார்"

சாவகச்சேரி, திங். 'நான் எனது கணவருடன்பேசுவதில்லை எனது பெற்றோருடன் நான் அலவரையில் வசிக்கிறேன். சம்பவதினத்தன்று நள்ளிரவு நான் நித்திரையில்இருக்கும்போது யாரோ எனது வலது கையைப் பிடித்து நெரித்தனர். நான் ஐயோ ஐயோ எனக்கத்தினேன், அப்போது எதிரி தனது மற்றக்கையால் எனதுகழுத்தைப்பிடித்து நெரித்தார். என்னால் பிறகு கத்தமுடியவில்லை. நான் முதல் கத்திய சத்தத்திற்கு எனது தந்தை ''லைற்றை'' அடித்துப்பார்த்தார். அறையில் எரிந்த லாம்பினதும், ''லைற்றினதும்'' வெளிச்சத்தின் உதவியால் வந்தவர் முருகேசு நாகநாதர் எனக்கண்டேன்".

இவ்வாறு பலாத்கார முயற்சி வழக்கொன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபேட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த சிவபூஷணம் கூறினார்.

இவ்வழக்கில் முருகேசு நாகநாதர் என்பவர் சிவபூஷணம் சோமசுந்தரம்வீட்டினுள் இரவுநேரத்தில் அத்துமீறிப் பிரவேசித்து அவர்மீது பலாத்காரம்பிரயோகிக்க முயற்சித்ததாக சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மாஜிஸ்திரேட் எதிரியைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலைசெய்தார்.

## சைக்கிளை வழிப்பறி செய்ததாக வழக்கு

மாவிட்டபுரம், திங்கள். காங்கேசன்துறை மாவிட்டபுரம் கொல்லையைச் சேர்ந்த எஸ். நாகராசா என்பவர் சென்ற ஜூலை மாதம் 9ந் தேதி காங்கேசன்துறை ஊராணியைச் சேர்ந்த நாகலிங்கம் சிவநேசத்தின் 150 ரூபாய் பெறுமதியான சைக்கிளை வழிப்பறி செய்ததாகவும் வழிப்பறி செய்யும்பொழுது அவருக்குக் காயமேற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராமநாதன் சாட்சியமளித்த பின் நீதிபதி எதிரி, கையால் அடித்துக் காயம் விளைவித்ததாகவும் மேலுமொரு குற்றச்சாட்டைக் குற்றப்பத்திரிகையில் சேர்க்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். புதிய குற்றச்சாட்டு சேர்க்கப்பட்டபின் சாட்சிகளை மீண்டும் குறுக்குவிசாரணை செய்வதற்கு எதிரிதரப்பினருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மேல்விசாரணை 17ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ. குமரகுரு ஆஜரானார். காங்கேசன்துறைப் பொலிஸாரின் உதவியுடன் வழக்கு நடந்தது.

## செய்திச்சுருக்கம்

### லண்டனில் முருகன் ஆலயம்

லண்டனில்இலங்கையைச் சேர்ந்த திரு. சபாபதிப்பிள்ளை தலைமையில் 'அகில பிரித்தானிய சைவசமய மன்றம்' நிறுவப்பட்டுள்ளது. இம்மன்றத்தின் முதல்நோக்கம் லண்டன்மாநகரில் ஒரு முருகன்ஆலயத்தை நிறுவுவதேயாகும்.

ஃ ஃ ஃ

### 'கவனமாகக் கண்காணியுங்கள்"

நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லப்படும்போது பல்வேறுகுற்றங்கள் செய்த கைதிகள் தப்பி ஓடுவதாகப் பொலிஸ்தலைமைக்காரியாலயத்துக்குச் செய்தி கிடைத்திருப்பதால் "கைது செய்யப்படுபவர்களை கவனமாகக்கண் காணியுங்கள்' எனப்பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரல் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு உத்தரவை அனுப்பியுள்ளார்.

ஃ ஃ ஃ

### கோவிலில் கொலை

எட்டியாந்தோட்ட களனி தோட்டத்தைச்சேர்ந்த 26 வயதுடைய பி. மாணிக்கம் என்பவர் சுப்பிரமணியகோவிலில்கொலை செய்யப்பட்டுள்ளார். எட்டியாந்தோட்டைப்பொலிசார் இதுசம்பந்தமாக மூவரைக்கைது செய்துள்ளனர்.

ஃ ஃ ஃ

### விடுதலை

இரண்டரை வருடங்களுக்கு முன் இலங்கையரான ரஹ்மான் என்ற 26 வயதுடைய இளைஞனைச் சட்ட விரோதகுடியேற்றக் காரரென அட்டன் பொலிசார் கைதுசெய்தனர். சென்றமாதம் 25ந்திகதி சட்டவிரோதக்குடியேற்றக் காரர் அல்ல என்று அட்டன் நீதிபதி இவரை விடுதலை செய்துள்ளார்.

ஃ ஃ ஃ

### 129 பேர் சிக்கினர்

சுங்கஇலாகாவினரிடம் கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட 159பேர் சென்ற வருடம் சிக்கினர்.

## சமயபாடம் போதிக்க ஏற்பாடு

### கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை தீர்மானம்

கொழும்பு, திங்கள். அடுத்த வருடம் தை மாதம் தொடக்கம் போயா தினத்துக்கு முதல் நாளில் சபை மண்டபத்தில் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மூன்று பிரிவுகளாகச் சைவச் சிறுவர்களுக்கு சமயபாடம் போதிப்பதென்று கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மற்றைய தீர்மானங்கள் வருமாறு:

போயா தினத்துக்கு முதல் நாட்களில் வயது வந்தவர்களுக்கும் சமய சம்பந்தமான உபந்நியாசங்கள், விரிவுரைகள் கூட்டு வழிபாடுகள் நடத்துவது; வருடந்தோறும் ஆண்டுவிழா நடத்தி அதில் சமய சம்பந்தமான பேச்சுப்போட்டி, எழுத்துப் போட்டி, திருமுறை ஓதுதல் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்குதல்; டிசம்பர் மாதம் 9-ம் திகதி காலை சைவச் சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் சமய தீட்சை நடத்துவது.

ஆசிரியருக்கு கடிதம்

## விசேஷ மசோதா என்ன செய்கிறது?

வடக்கு, கிழக்குமாகாணத்தில் தமிழ்மொழிமூலம் இங்குள்ள தமிழர்கள் அரசாங்க காரியாலயங்களுடன் தொர்பு கொள்ளலாமென தமிழ்மொழி விசேஷமசோதா வழிவகுக்கிறது. ஆனால் இந்தவழியில் சிலதடைகள் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருப்பது இப்பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு பெரும் கஷ்டத்தையும் வேதனையையும் அளிப்பதாக இருக்கிறது. சிங்கள மக்களுக்குசிங்களம் எப்படியோ தமிழ் மக்களுக்கு தமிழ் அப்படியே என ஓயாது பேசப்படுகிறது. ஆனால் நடைமுறையில் காரியங்கள் எல்லாம் எப்படியோ நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக் கிளையிலிருந்து திரப்பி அனுப்பப் படுவதற்கு என ஒரு குறிப்பிட்ட பத்திரம் வரும்போது அதனுடன் விலாசம் அச்சடிக்கப்பட்ட ஒரு கடித உறையும் வருவது வழக்கம் இந்தக் காகித உறையில் இருப்பது சிங்களம் மட்டும் தான். உள்ளுக்குவரும் பத்திரத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் இருக்கிறது. ஆனால் திருப்பி அனுப்பப்படவேண்டிய விலாசம்மட்டும் சிங்களத்திலிருக்கிறது. இது எங்கேபோய் சேருமென்பது தமிழ்ப் பிரதேசத்திலுள் தமிழ் மட்டும் தெரிந்தவருக்கு எப்படித் தெரியும்.

அரசாங்க காரியாலயங்களிலுள்ளவர்கள் கொஞ்சம் பொதுநோக்கோடு நடந்து கொண்டால்தான் பொதுமக்களின் வீணான கஷ்டங்கள் ஓரளவுக்காவது குறையும். அரசாங்கம் கவனிக்குமா? க. க.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்க தொடர்ச்சி)

'டுமீல் சூடு' கவிந்த் தானே விரும்புறுகள்! தன்ரை பேர் ஒரு தாலிக்காவது பேப்பரிலை வரட்டுமெண்டு நினைச்சு நஞ்சுகுடிச்சு சாகிற பேயன்களும் இந்தக் காலத்திலை இருக்கிறுங்கள்' 'என்று இயம்பினூர் எல்லாமறிந்த வல்லிபுரத்தார்.

''உலகத்திலை அதர்மம் மிஞ்சிவிட்டுது. தர்ம தேவதை ஓடி ஒளிச்சிட்டாள். நீதி நியாயமில்லாமல் வட்டி வாங்குகிறுன்கள், குடுக்கிற சம்பளத்துக்கேற்ற கூலி செய்யிறுன்களில்லை. புருஷன் வாறத்துக்கு முந்தி பெண்டில் சாப்பிட்டுவிடுகிறுள் "எங்கே போறுய் தம்பி" எண்டு கேட்டால் 'உனக்கு சொல்லவேணுமெண்டு அங்கேயோ, என்டு கேட்குது வளங்கெட்டுக் குட்டான். ஐம்பது ரூபாய் சம்பளம் எடுக்கிற கிளாக்கர் அஞ்சு லட்சத்துக்கு சீதனம் குடுக்கிறுர் — அவ்வளவுக்கு அவற்றைகை நீளுகிறது! இப்படியெல்லாம் அநியாயங்கள் நடக்கும்போது அகாலமரணங்கள் வராமல் என்னசெய்யும்?'' என்று கேட்டார் இன்னத்தம்பிச் சட்டம்பியார்.

''பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்கும்வரைஇந்த மாதிரி சம்பவங்கள் இருக்கத்தான்செய்யும், உள்ளவன், இல்லாதவன் என்ற பெரும்பிளவு வரவர வளர்ந்துகொண்டேபோகிறது. தொழிலாளியின் ரத்தத்தை உறிஞ்சி முதலாளி கொழுக்கிறுன். ஏழையின் வயிற்றில் அடித்து வியாபாரி தனவந்தனுகின்றுன். 90 வீதம் பேரை நசுக்கி 10 பேர் குபேர வாழ்க்கை நடத்துகிறுர்கள்'' — அந்தசந்தமில்லாமல் பேசினுன் கல்லூரி மாணவன்.

''இதுகளைப்பற்றிப் பேசாமை விசாரணை செய்யயோ எங்களுக்கு என்ன தருதியிருக்குதப்பா! அன்றெழுதினவன் அழிச்சு எழுதப்போவதில்லை. எல்லாம் ஏற்கெனவே முடிவாக்கப்பட்ட திட்டங்கள். மாற்ற முடியாது. நாங்கள் இதுக்காக குத்திமுறிஞ்சு ஒரு பயனும் கிடையாது. பேசாமல் நடக்கிறதுநடக்கட்டும் என்டுநினைச்சுக்கொண்டு இருக்கிறது தான் சரியானபுத்தி'' என்று சித்தாந்தம் பேசினூர் சிற்றம்பலத்தார்.

''தீபாவளி இந்தமுறை வெள்ளிக்கிழமை வருகிறதாமே?' என்று நிகழ்காலத்துக்குத் தொடர்பில்லாமல் கேட்டார் வல்லிபுரத்தார். தீபாவளியை திவிரமாகக் கொண்டாட முடியவில்லையே என்ற கவலை அவருக்கு.

''ஒருநாள் தள்ளி சனிக்கிழமை கொண்டாடினுல் போச்சுது'' என்றுன் கல்லூரி மாணவன்.

''அன்றைக்கு சூரியகிரகணம் இருக்குது, தம்பி, எங்கடைகண்ணுக்கு தெரியாது தான். எண்டாலும் சூரியன் நீசமான இந்த மாசத்திலை என்னென்ன நடக்குமோ தெரியாது'' என்று பக்தி சொன்னூர் சாத்திரியார்.

—வழிப்போக்கன்

## மீன்பிடியாளருக்கு உத்தரவாத விலை

கொழும்பு, திங்கள். மீன்பிடியாளருக்கு உதவியளிக்கும் முகமாக உத்தரவாத விலைத்திட்டமொன்றை மீன்பிடி கூட்டுத்தாபனம் அமுலாக்கும். தற்போது தாங்கள் பெற்றுள்ள இடத்தில் கூட்டுத்தாபனம் இறங்கி, பருவகாலத்திலும் அல்லாத காலத்திலும் மீன்பிடியாளரின் மீனை உத்தரவாத விலைக்கு வாங்கும். பின்னர் அந்தமீனை வழக்கமான பருவகால விலைகளின்படி கூட்டுத்தாபனம் மீன் விற்பனையாளருக்கும் சந்தைகளுக்கும் விற்கும்.

திட்டத்தின் விபரங்கள் மீன்பிடி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. எம். பீ. ராஜரத்தினவுக்கும், மீன்பிடியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு மிடையே நவம்பர் 17-ல் நடைபெறும் மாநாட்டில் விரிவாக ஆராயப்படும்.

## திட்டம் செயற்படவில்லை

பூநகரி, திங்கள். பூநகரி அரசினர் ஆஸ்பத்திரியில் போதியளவு குடிநீர் கிடைக்காததைத் தொடர்ந்து கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் முயற்சியால் குழாய்நீர் விநியோகத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழில்நுட்பப் பணியாளர் சிலர் இங்கு வந்து திட்டநிர்மாணத்திற்குரிய மதிப்பீட்டு வேலைகளை ஆரம்பித்துப் பல மாதங்களாகியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழிபுரம் விக்ரோறியா வெற்றி

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக் கோஷ்டிக்கும், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி கோஷ்டியினர் 4—1 கோல்களால் வெற்றிபெற்றனர். போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## விவசாயிகள் கஷ்டம்

சங்கானை, திங்கள்

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள கமக்காரர்கள் தங்களுக்குவேண்டிய உரத்தைத் தேவையான நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியாது கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது. அவர்களை எதிர்நோக்கிய கட்டுப்பாட்டினால் உரம்பெறும்விவசாயிதனது நேரத்தை வீணாக்குமல்லாமல் தேவையான நேரம் உரம்பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனப் புகார் செய்துள்ளனர்.

## புதுவருட நிர்வாகிகள்

சங்கானை, திங்கள்

சங்கானை கிழக்குப் பயிர்ச் செய்கைக் குழுவின் வருடாந்தக்கூட்டம் வடபெரும்பாக உத்தியோகத்தர் திரு. என். இரத்தினராசா தலைமையில் சங்கானை ஸ்ரீ நாகலிங்க சுவாமிகள் மடத்தில் நடைபெற்றபோது இவ்வாண்டு உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. வி. பி. சபாபதிப்பிள்ளை, காரியதரிசி; எம். கணேஷ், தனாதிகாரி: திரு. எஸ். சின்னத்துரை.

## இயற்கை வனப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவும் ஒன்றாகும்.

ஆனால், தொடக்கம் ஒன்று ஆரம்பமாகிவிட்டது.

அண்மைக் காலத்தில், வெளிநாட்டு முதல் — அரசாங்க, தனியார் முதல் இரண்டும் — சுவாஸிலாந்தினுள் நிறையச் செலுத்தப்பட்டுள்ளது.

சுவாஸிலாந்தின் முழு ஜனத்தொகையான 288,000த்தில் ஏறத்தாழ 8,000த்தினர் வெள்ளையராவர் சுவாஸிலாந்தின் அதிக சக்தி வாய்ந்த அரசியல் கட்சியான இம்போக் கொட்வோவுடன் இவ்வெள்ளையரும் அரசாங்கநிர்வாகத்தில் பங்குபற்றுகின்றனர்.

(பி. டி. ஐ)

## தாக்குதல் வழக்கில் எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை திங்,

கரவெட்டிகிழக்கைச் சேர்ந்த ஆழ்வான் சண்முகம், ஆழ்வான் தியாகன், கதிரன் ஆழ்வான், மாணிக்கம் வெள்ளையன் ஆகிய நால்வரும் அதே ஊரைச் சேர்ந்த சோமு மீனாட்சி என்ற பெண்ணை சென்ற ஆகஸ்ட் மாதம் 14ந் திகதி தலைமுடியில்பிடித்துஇழுத்து அடித்து காலால் உதைத்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ரூபேட்சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. வல்லி சின்னவன் சாட்சியமளித்த பின் மாஜிஸ்திரேட் எதிரிகள் நால்வரையும் சுற்றவாளிகளாகக்கண்டு விடுதலை செய்தார்.

## பாலம் உடைக்க சதி செய்தனர்

வாஷிங்டன், நவ. 7

ஸாம்பியாவிலுள்ள பிரதான ரயில் பாலமொன்றை வெடிவைத்து நாசமாக்க இரு ஆபிரிக்கர்களுக்கு கைலஞ்சம் கொடுக்க முயன்றதாக இரு நியுயோர்க் நபர்களை அமெரிக்க இரகசிய சேவையான எவ். பி. ஐ கைது செய்துள்ளது.

(பி. டி. ஐ.)

## சர்வ தேச சிறுவர் தின விழா

துணுக்காய், திங்.

துணுக்காய்ப்பகுதி பாடசாலை மாணவர்களது சர்வதேச சிறுவர்தின விழா துணுக்காய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு துணுக்காய் காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம் தலைமைவகித்தார். துணுக்காய் கிராம சபைத்தலைவர் திரு. க. க. சோமசுந்தரம், திரு. வ. வேலுப்பிள்ளை ஜே. பி. திரு. செ. மயில்வாகனம், உட்பட பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

## எம் ஐ.ஜி. விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

சைகோன், நவ. 7

ஹனோயிலிருந்து 100 மைல் வடமேற்காக அமெரிக்க ஜெட் விமானங்கள் ரஷ்ய தயாரிப்பான இரண்டு எம். ஐ ஜி. விமானங்களை சுட்டு வீழ்த்தின.

## மர்மமா..? மந்திரமா..?

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டில் அதிசய சம்பவங்கள் நடைபெறுகின்றன.

தாயும், மகளும் வசித்து வரும் இந்த வீட்டில் கடந்த சில தினங்களாக பல பொருள்கள் மாயமாக மறைகின்றனவாம் சில பொருள்கள் இருந்த இடத்தில் இல்லாமல் அயல் வளவுகளிலும் வெவ்வேறு இடங்களிலும் கிடைக்கின்றனவாம்.

நேற்று அவ்வீட்டில் இருக்கும் வயது முதிர்ந்ததாயார் தமது படுக்கையை விரித்துவிட்டு வெளியே சென்று கால் கழுவிவிட்டு வந்தபோது படுக்கை விரிப்பு ஒன்றையும் காணவில்லையாம். வேறு சில பொருள்கள் வைத்தஇடத்தில் காணமுடியாது வேறு இடங்களில் இருக்கின்றனவாம்.

## எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, திங்கள்

கரவெட்டி கிழக்கைச்சேர்ந்த கதிரன் சோமு என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த ஆள்வான் பசுபதி என்பவருடையவீட்டிற்கு இவ்வருடம் ஆகஸ்ட்மாதம் 12 ந்திகதி தீவைத்து 2500 ரூபா பெறுமதியான உடைமைகளைச் சேதப்படுத்தியதாக பருத்தித்துறைப்பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் ரூபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கணபதி ஆழ்வான் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

## சோதிடத்தில் நம்பிக்கை

பாங்கொக், நவ. 7

தாய்லாந்தின் முதலாவது சோதிடக் கலாசாலையிலிருந்து 25பேர் பட்டம்பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களில் ஓய்வு பெற்ற ஏர் வைஸ் மார்ஷல் மென்மியாம் தானும் ஒருவராவர்.

தான் சோதிடத்தில் நம்பிக்கை வைக்க வில்லையென்றும், கிரகங்களை தாம்ஆராய்ந்தவிடத்து தனது மகன் கடந்தவருடம் விமானவிபத்தில் இறந்தது சரியாக நிர்ணயிக்கப் பட்டிருந்ததென்றும், அது முதலே தான் சோதிடத்தில் நம்பிக்கையும் கொண்டாரெனவும் ஏர் வைஸ் மார்ஷல் தெரிவித்தார்.

(பி டி. ஐ)

## நள்ளிரவு 'நாடகம்'

அச்சுவேலி, திங்கள்

அச்சுவேலி கோவிற்பற்றிலுள்ள வறணன், கதிரிப்பாய் தம்பாலை, இடைக்காடு கிராமங்களில் இரவு11 மணிக்கும் அதிகாலை 3 மணிக்குமிடையில் கோழிகள், ஆடு, மாடுகள் திருட்டு மிகவும் மோசமாக நடைபெறுகிறது இது குறித்துப் பொலிசார் தங்கள் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

## டபிள்டெக்கர் - கார் விபத்து

சங்கானை, ஞாயிறு

இரட்டைத்தட்டுபஸ் ஒன்றும் மோட்டார்காரும் மோதிக்கொண்டதால் இருவர் பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து யாழ்-காங்கேசன்துறை வீதியில் நிகழ்ந்தது.

காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இரட்டைத்தட்டுபஸ் ஒன்றுடன், எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் வண்டி மோதிக்கொண்டதால் மோட்டார்வண்டி பலத்த சேதத்துக்குள்ளானதுமல்லாது அதில் பிரயாணம் செய்த சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்து யாழ்- பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனைக்கோட்டைப் பொலிசார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடத்தினர்.

## நம்பிக்கை மோசடிவழக்கு

மானிப்பாய்புரம், திங்கள்

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்தசிவரட்ணம் சபாரட்ணம் என்னும் இளைஞன் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான முருகேசு லட்சுமியாரின் 700ரூபாபெறுமதியான ஒருசோடிகாப்பையும் ஒரு சங்கிலியையும், அம்பலவாணர் லட்சுமியாரின்300ரூபா பெறுமதியான ஒரு சோடி காப்பையும் இரவல்வாங்கிச் சென்று விற்றதன்மூலம் நம்பிக்கை மோசடி செய்ததாக சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்குமல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி தான்முன்னர் குற்றவாளியென்று கூறியதை வாபஸ் பெற்றுக்கொண்டு குற்றவாளியென்று கூறினர். நீதிபதி எதிரியைப்பற்றி நன்நடத்தை அதிகாரியை அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டு வழக்கை இம் மாதம்14ந்திகதி ஒத்திவைத்தார்.

## "நஷ்டஈடு வழங்குக"

கிளிநொச்சி, திங்.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த சிறுபோகம் காலபோகம், வேளாண்மையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கரைச்சி கிராமசபையின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## திருமூலர் விழா

சுழிபுரம், திங்கள்

யாழ். சைவ சித்தாந்த சங்க ஆதரவில் தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் சன்னிதானத்தில் திருமூலர்விழா நடைபெற்றது. விழாவுக்கு சங்கத் தலைவர் திரு. நா செனுஇராசா தலைமை வகித்தார் பலர் உரை நிகழ்த்தினர்.

## சீன - சோவியத் ஒப்பந்தம்

ஹொங்கொங், நவ. 7

விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்த மொன்றினை சீனாவும், ரஷ்யாவும் பீகிங்கில் கைச்சாத்திட்டுள்ளதாக நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

(பி. டி. ஐ.)

## பாங்ஹொக்குக்குப் பயணமானர்

கராச்சி, நவ. 7

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி திரு. ஆதம் மாலிக் பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி திரு. சரீப்தீன் பேர்ஸதாவுடனும், ஜனாதிபதி அயூப்கானுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்திவிட்டுத் தமது தாய்நாடு திரும்பும் வழியில் பாங்கொக்குக்கு இன்று இங்கிருந்து பயணமானர்.


(பி. டி. ஐ.)

## மாரடைப்பால் மரணம்

கொத்மலை, திங்

கொத்மலையைச் சேர்ந்த கிஸ்டன்தோட்டத்தில் நேற்று முன்தினம் ஆறுமுகம் என்பவர் மாரடைப்பினால் மரணமானர்.

சங்கானைப்பொலிஸ் சார்பில் சப்இன்ஸ்பெக்டர்திரு. வி. செல்லையா வழக்கை நடத்தினர். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.




பிரிட்டிஷ் மோட்டார் கார்ப்பரேஷன் அமைத்துள்ள புரட்சிகரமான "மினி" டிராக்டர் கொழும்பு நகர சுற்றுப்புறத்திலுள்ள நெல் வயல் ஒன்றில் தனது சாதனைகளைப் புரிந்து காட்டுவதைப் படத்தில் காண்க. உதவி விவசாய மந்திரி திரு. பி. ஸி. இம்புலானை, (இடமிருந்து இரண்டாவதாகக் காணப்படுபவர்) விவசாய அமைச்சின் உதவி [illegible] திரு. [illegible] சிறீ பெரேரா (இடமிருந்து மூன்றாவதாகக் [illegible]) இதனை அவதானித்துக்கொண்டு நிற்கின்றனர்.


ஒருநாள் வேலை

சிறுபிள்ளை விளையாட்டு

போலிருக்கும்



சக்தியூட்டும்

பிரான்கோ

சொக்கலெட்டுகளை

அருந்தினால்.

உருகாத உறைகளில்

உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பிரிவு 'ஏ' டிவிஷன்

# இன்று நடைபெறும் சாம்பியன் போட்டி

திருநெல்வேலி, செவ்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாம் பிரிவு 'ஏ' டிவிஷன் சம்பியன் போட்டி இன்று மாலை நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கத்தில் மாலை 4-30 மணிக்கு நடைபெறவிருக்கும் இப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொள்ளும் இரு கோஷ்டிகள் சார்பிலும் விளையாடும் வீரர்கள் விபரம்:-

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி; எஸ். சண்முகலிங்கம் (கப்டன்), ரி. செல்வாதரன் (உதவி கப்டன்), எஸ். உதயலிங்கம், ரி. சுப்பிரமணியம், எஸ். பவலிங்கம், எஸ். ம். ஷரீப், கே. கணபதி, ரி. தர்மகுலசிங்கம், இ. ரகுநாதன், சச்சாரீஸ்வரன், ரி. கந்தசாமி.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி: இ. சின்னத்தம்பி, (கப்டன்), ஏ. இராஜேந்திரம் (உதவி கப்டன்), டி. ஜே. கனகசபை, எம். வராஜசிங்கம், எஸ்.கதிரமலை, எஸ். சிவானந்தன், கே: சரவணபவானந்தன். எஸ். தருமராஜா, கே. சத்தியானந்தன், எஸ். இராசலிங்கம், எம். ஏ. செல்வராஜா.

## பிரிட்டனில் பயிலும் தமிழ் ஆசிரியை

லண்டன், நவ. 7

பெண் சாரண இயக்கத்தலைவர்களில் ஒருவரும், ஆசிரியையுமான செல்வி சாந்தி சினித்தம்பி தற்சமயம்பிரிட்டனில் இளைஞர் சங்க இயக்கங்கள் பற்றி பயின்று வருகிறார். இவர் மட்டக்களப்பைத் தாயகமாகக் கொண்டவர். துகேகொட மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் ஒரு பெண்சாரண மாவட்ட கமிஷனராகும்.

பிரிட்டிஷ் தேசிய வாலிபர் கழகத்தினதும், பெண் சாரணர் சங்கத்தினதும் அழைப்பின் பேரில் பிரிட்டன் விஜயம் செய்திருக்கும் செல்வி சினித்தம்பி நொட்டிங்ஹாம், ஹல், பேவர்லி, லேக் மாகாணம், ஸ்கொட்லாந்து, லண்டன் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து பிரிட்டிஷ் இளைஞர் கழக நடவடிக்கைகள் பற்றி அடிந்தறிந்தார் ஸ்கொட்லாந்தில் பெண் சாரண இயக்க பயிற்சி நிலையம் ஒன்றில் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளிலும் அவர் கலந்துகொண்டார். செல்வி சினித்தம்பி நவம்பர் மாதம் 20-ந் திகதி தாயகம் திரும்புகிறார்.

## போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். கால்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நாலாந்தறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் குருநகர் ஐக்கியவிளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

காரசாரமாக நடைபெற இப்போட்டி கடைசி நேரத்தில் வெளிச்சமின்மை காரணமாக ஒத்திவைக்கப் பட்டது.

இடைவேளைக்கு முன் குருநகர் கோஷ்டியே முதலாவது கோலை போட்டது. இக்கோலை இக்கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் மெலின் போட்டார். இடைவேளைக்குப்பின் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. ஒருவருமே கோல்கள் போடவில்லை, இக்கட்டத்தில் மத்தியஸ்தர் பி. ஏகாம்பரம் போட்டியை நிறுத்தி ஒத்திவைத்தார் இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## தொழிலாளர் ஆய்வு வகுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

தொழிலாளர்களுக்கான ஆய்வு வகுப்பு இம்மாதம் 19, 20-ம் திகதிகளில் சென் ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகும். இந்த ஆய்வு வகுப்பை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆரம்பித்துவைப்பார். 14 சங்கங்கள் இதில் கலந்துகொள்ளும். சுமார் 250 தொழிலாளர்கள் கலந்துகொள்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

## நியமனம்

கனகராயன்குளம், திங்.

விடத்தல் தீவைச் சேர்ந்த திரு. தம்புகணேஷ் என்பவர் நட்டாங்கண்டல் உணவு உற்பத்தி மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவராவர்.

# இன, மத பேதமற்ற சமய சமூகத் தொண்டர்

## சமாதான நீதவான் பட்டம் பெற்ற திரு. சின்னத்துரைக்கு பாராட்டு

கொட்டாஞ்சேனை, திங்கள்

"பொதுமக்கள் சம்பந்தமான எந்தவொரு விஷயத்திலும் சாதி, மதம், இனம் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் சேவைசெய்து வரும் சமாதான நீதவான் திரு. ச. த. சின்னத்துரை, சிங்கள இலக்கியத்துக்கும், பௌத்த சமயத்துக்கும் கூட தொண்டாற்றி வருகிறார் என்பதை கௌரவிக்குமுகமாகச் சிங்கள சமயமேதை அநகாரிக தர்மபாலா ஞாபகார்த்தப் பதக்கத்தை அணிவிப்பதில் பெருமைகொள்கிறேன்."

உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸா, கொழும்பு சென். செபஸ்தியான் சுசமிந்த மாவத்த, சுகரித்த மண்டபத்தில் சமாதான நீதவான் திரு. ச. த. சின்னத்துரைக்கு சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் பதக்கம் அணிவித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

உதாரவலை விமலகீர்த்தி தேரோவும் திரு. த. சின்னத்துரை இன மத வேறுபாடில்லாமல் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டினார்.

உதவி மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா, தமது சொற்பொழிவில் தமிழரான திரு. சின்னத்துரையைக் கௌரவிப்பதற்குப் பெருந்தொகையான சிங்கள மக்கள் திரண்டிருப்பதைப் பார்க்க, ஈழத்தில் தேசிய ஐக்கியத்தை எந்தச் சக்தியாலும் குலைக்கமுடியாதென்பதைக் காட்டுகிறதெனக் கூறினார்.

திருமதி குசுமா குணவர்த்தன பேசியதாவது:

"தொழிலாளர் இயக்கத்துக்கு, பிரபல வியாபாரியாக இருந்தும் திரு சின்னத்துரை ஊக்கமளித்ததை இங்கு குழுமியிருக்கும் மற்றும் வியாபாரிகளும் அறிந்துகொள்ளுதல் அவசியமாகும். இலாபத்தைக் கருதாது, சமூகசேவையை அவர் கருதினாரென்பதை நாம் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும். இதனால் சமாதானநீதவான் பட்டம் பெறுவதைப் பாராட்டுவதில் நான் பெருமையடைகிறேன்."

திரு. ஈ. சோ. கதிராக்கொன்ன பேசும்போது திரு. சின்னத்துரை, சிங்கள இலக்கிய நூல்களை வெளியிட்டமையையும், சிங்களக் கவிஞர்களையும், சிங்கள நூலாசிரியர்களையும் ஆதரித்தமையையும் குறிப்பிட்டு அதனால் சிங்கள மக்கள் அவரைக் கௌரவிக்கக் கடமைப்பட்டிருப்பதாகக் கூறினார்.

கொழும்பு மேயர் ஜனாப் ஜாபிர் ஏ. காதர் பேசுகையில் திரு. சின்னத்துரை, தம்முடன் கூடநின்று கொழும்பில் பல முக்கியமான சமூகசேவைகளில் பெரும் ஒத்துழைப்பு நல்கியதைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.


கொழும்பு மாநகரசபை வாழைத்தோட்ட அங்கத்தவர் திரு. டி. ஏ. பியதாஸ வேக்கந்த வட்டார அங்கத்தவர் திரு. இராமநாயக்கா அளுத்கடை மேற்கு வட்டார அங்கத்தவர் ஜனாப் எஸ். எம். மொஹிதீன் ஆகியோரும் பேசினர்.

ஹரிஜனங்களுக்கு திரு சின்னத்துரை ஆற்றிய தொண்டைப் பாராட்டி, ஹரிஜன நிர்வாகிகளில் இருவர் பேசியதுடன் மலர் மாலையும் அணிவித்துக் கௌரவித்தனர்.

"தொழிலாளர் இயக்கம் ஆரம்பித்த அக்காலத்திலே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தசமயத்தில் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்தில்வைத்து அவர்களுக்கு ஊக்கமளித்து பயன்பெற வாய்ப்பளித்த திரு. ச. த. சின்னத்துரை சமாதான நீதவானாகப் பதவிபெற்றதை நாம் பெரிதும் பாராட்டாமல் இருக்க முடியாது" என்று அகில இலங்கைத் துறைமுக டொக் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. டி. ஏ. பியதாஸ குறிப்பிட்டார்.

செனட்டர் வை. ஆர். பியசேன பேசுகையில் திரு. த. ச. சின்னதுரையை நீண்டகாலமாகத் தெரியுமென்றும், சிங்கள இலக்கியத்துக்கு தொண்டுசெய்வதோடு சிங்களக் கவிஞரை ஆதரித்து ஊக்கமூட்டி வந்தாரென்றும், தமது வியாபார நண்பரைப் பாராட்டி மகிழ்வதில் தாம் பெருமை

(8-ம் பக்கம் பார்க்க)



திரு. சின்னத்துரைக்கு அநகாரிக தர்மபாலா பதக்கத்தை உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா அணிவிக்கிறார்.

## பொலிஸ் அதிகாரிகளை பரிமாறும் திட்டம்

லண்டன், நவ. 7

சாம்ராஜ்ய நாடுகள் மத்தியில் பொலிஸாரை பரிவர்த்தனை செய்துகொள்ளும் திட்டம் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. பிரிட்டனில் குடியேறிய மக்களுக்கும் பிரிட்டிஷ் பொலிஸ் படையினருக்கும் மத்தியில் பரஸ்பர நல்லுறவை வளர்க்கும் முகமாகவே பிரிட்டிஷ் உள்துறை மந்திரி திரு. ரோய் ஜென்கின்ஸ் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறார்.

## ஞாபகார்த்த தினம்

கொழும்பு, திங்கள்


இரண்டு உலக யுத்தங்களினதும் ஞாபகார்த்த தினமாக நவம்பர் 11ம் தேதி வெள்ளிக்கிழமை, உள்நாட்டு மந்திரி திரு. தகநாயக்கா நிர்ணயித்துள்ளார். அன்று முன்பகல் 11 மணிக்கு இரண்டு நிமிடமௌனம் அனுட்டிக்குமாறு அவர் எல்லாரையும் கேட்டுள்ளார்.


## செவண் சீஸ்


அவனுக்கு மேலதிக சக்தியும் வலுவும் அளிப்பது அதுவே...




சக்தி நிறைந்த போஷாக்கு எண்ணெயில் விட்டமின் ஏ. டி. ஆதியன கொண்டதே செவண் சீஸ். இதிலே பொலியுன் சச்சுரேட்ஸ் என்னும் ஆதாரப் பொருள் அபரிமிதமாக அடங்கப்பெற்றிருக்கிறது. ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும், இளைஞர், முதியோர் ஒவ்வொருவரும் சுக பலத்துடன் வாழ ஒத்தாசை செய்யவும் உகந்த பொருள் என டாக்டர்கள் கொட் லிவர் ஒயில் என்னும் மீன் எண்ணெயைச் சிபார்சு செய்கிறார்கள்.



உற்பத்தியாளர்களின் சொந்தப் போத்தலிலேயே அடைக்கப்பெற்ற அசல் செவண் சீஸ் கொட் லிவர் எண்ணெயையே வேண்டுமென்று கேட்டு வாங்குங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிரிக்கு வாரண்ட்

சாவகச்சேரி, திங்கள்
முரசுமோட்டையில் வி. செல்லையா என்பவரை கே. செல்வநாயகம் தாக்கிக் காயப்படுத்தியதாகக் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்றுகாலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது எதிரி கே. செல்வநாயகம் சுகமில்லையென வைத்திய அத்தாட்சிப்பத்திரம் அனுப்பியிருந்தார். ஆனால் மாஜிஸ்திரேட் அதை நம்பமுடியாதெனத் தெரிவித்து எதிரிக்கு வாரண்ட் பிறப்பித்தார். ...ரீகள்.

---

## இனமதபேதமற்ற...

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

கொள்வதாகவும் கூறினார். வலனசூரிய எம்.பி.யும் பேசினார்.

தம்மைக் கௌரவித்தவர்களுக்கு திரு. சின்னத்துரை நன்றி தெரிவித்தார்.

உதிராவெலை விமலகீர்த்தி தேரோ, திரு. ச. த. சின்னத்துரையின் இன, மத வேறுபாடற்ற சேவையைப் பாராட்டினார்.

புறக்கோட்டை ஐக்கிய போதிராஜ சங்கத்துக்கு ஆற்றிய சேவைகளையிட்டு திரு. ச. த. சின்னத்துரையைப் பாராட்டுவதில் பெருமையடைவதாக சங்க உபதலைவர் திரு. எம். பி. தேசபந்து தெரிவித்தார்.

கவீந்திரர் குடலிகம, சிங்களக் கவிஞர்களை ஆதரித்து ஊக்கமூட்டிப் பிரசுரங்கள் வெளியிட்டமையைக் குறிப்பிட்டு தோஞ்சலி செய்தார்.

குடிசைக் கைத்தொழில் சங்கத் தலைவரும், விவாகப் பதிவாளருமாகிய திரு. ஜே. பி. வாசிபவாசம், பல கைத்தொழில்களைத் தொடக்கி ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைகொடுத்து சாதிசமய பேதமின்றி உழைத்தமைக்காக திரு. சின்னத்துரைக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்ததென்று கூறினார்.

கொழும்பு தெற்குப் பிரதேச வித்தியாதிகாரி திரு. வெ. சங்கரலிங்கம் பேசியபின் திரு. பி. ச. எலாறிஸ் பெரேரா சரித்த இயக்கம் சார்பாக பாராட்டுரை வழங்கினார்.

மாணவிகளின் பாராட்டுக் கீதங்களும், கண்டிய தனிநடனமும் இடம்பெற்றன.

கூட்டம் ஆரம்பமாகு முன்னர், டாம்வீதி, இனிக வெல்ல சந்தியிலிருந்து ஊர்வலமாகக் கண்டிய நடனத்துடன் திரு. சின்னத்துரை விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். விழாவுக்குச் சமூகமளித்தவர்களை வரவேற்புக் குழுத் தலைவர் திரு. ச. சோ. சுதிராக்கொன்ன வரவேற்றார்.


கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

தங்கள் தறிகளில் உற்பத்தியாகும் எந்த விதமான ஜவுளிகளையும், பெறுமதியான விலைகளில் எம்மிடம் விற்பனைசெய்யலாம். தொடர்புகொள்க.

S. R. S.
ஜவுளிமாளிகை
சி. இ. செல்லத்துரை
216, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296


## மின்சார ஊழியா மின்சாரத்தில் தாக்குண்டார்

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் மின்சார நிலையத்தில் கடமையாற்றும் மின்சார ஊழியரான எச், டபிள்யு. சில்வா என்பவர் கந்தர்மடத்தில் மின்சாரவேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மின்சாரத்தினால் தாக்குண்டு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தம்

கொத்மலை, திங்கள்

நாவலப்பிட்டியாவைச் சேர்ந்த கிறீன்வுட் தோட்டத் தொழிலாளர்கள் திடீரென வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். இ. தொ. காங்கிரசைச் சேர்ந்த சுமார் 400 தொழிலாளர்களும் புல் வெட்டும் தகராறை அடிப்படையாக வைத்து மேற்படி வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது.

---

## எம். பி. பாராட்டு

இளையாணன், திங்கள்

"இந்தப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் திறமையுள்ளவர்கள். கடந்த இரண்டு வருடங்களில் இப்பாடசாலை உடுப்பிட்டித் தொகுதிப் பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றது. ஆனால் இவ்வருடம் போட்டியில் பங்குபற்றாதது கவலையளிக்கிறது" இப்பாடசாலைகளின் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்வேன்" என்று உடுப்பிட்டி இளையாணன் அரசினர் பாடசாலை பரிசளிப்பு விழாவுக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமைவகித்துப்பேசுகையில் கூறினார்.

சைவப்புலவர் திரு. இ. வல்லிபுரம், கவிஞர் திரு. மு. செல்லையா தலைமையாசிரியர் திரு. த. இரத்தினம் ஆகியோரும் பேசினார்கள்,

---

## தீண்டாமை ஒழிப்பு பிரசாரக்கூட்டம்

### கம்யூனிஸகட்சி ஏற்பாடு

யாழ்ப்பாணம். செவ்

தீண்டாமை ஒழிப்பை ஆதரித்து வடபகுதியில்கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டங்கள்நடாத்தசீனசார்புள்ள கம்யூனிஸ்ட்கட்சி ஏற்பாடுசெய்துள்ளது.

நாளைமாலை கொட்டடியிலும், 10ம்தேதி சாவகச்சேரியிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும். இக்கூட்டங்கள்தொடர்ச்சியாக இருவாரங்கள் நடைபெறவிருக்கிறது. காரைநகர், கரவெட்டி,வரணி மந்துவில் மற்றும் பல இடங்களில் பிரசாரக்கூட்டங்களை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் 18ம் திகதி ஆரம்பமாகும் சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்தியாக்கிரகத்தில் தனிப்பட்ட முறையில் கட்சிஅங்கத்தவர்கள் கலந்துகொள்வார்கள் என்று கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சதிவழக்கு

# 'பார்சலுக்குள் தோட்டாக்கள் வெடிமருந்து இருந்தன'

### ஹோட்டல் முதலாளி சாட்சியம்

கொழும்பு, திங்கள்

சதிவழக்கு விசாரணை இன்று கொழும்பு மாவட்ட மாஜிஸ்திரேட் திரு. ஜி. பி. எஸ், டேவிட் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது மஹரகம ஹோட்டல் மனேஜர் திரு. பத்திரான என்பவர் சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்திற்கூறியதாவது.

எனதுஹோட்டலுக்குசேர்ணல் அமரதுங்கா ஒரு பார்சலை ஒருநாள்கொண்டுவந்து வைத்து பின்னர் எடுத்துச் செல்வதாகக் கூறிச்சென்றார். ஆனால் ஒருமாதமாகியும் அவர் அப்பார்சலை எடுத்துச் செல்லவில்லை. இப்பார்சலுக்குள்துப்பாக்கி தோட்டாக்கள், வெடிமருந்து ஆகியன இருந்தன நான் இந்தப் பார்சலை பொலிஸாரிடம் ஒப்படைத்தேன்

விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

## கார் மோசடி வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

இ. என். நம்பருடைய ஆஸ்டின் 'ஏ போர்டி' காரை விற்று நம்பிக்கை மோசடி செய்ததாக அச்சுவேலியைச் சேர்ந்த குழந்தைவேலு பொன்னுமீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் பொலிசார் அவரை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம், அவரை 250 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, கட்டளை கிடைத்ததும் ஆஜராகும்படி உத்தரவிட்டார். எதிரி சார்பில் புறக்டர் தலையசிங்கம் யோகநாதன் ஆஜரானார்.

# 'போதனு மொழியாக ஆங்கிலம் இருக்கவேண்டும்'

வட்டுக்கோட்டை, திங்.

'தமிழ்ப்பிள்ளைகளின் போதனுமொழி ஆங்கில மொழியாகவே இருக்கவேண்டும்' என்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபரும் கல்லூரி முகாமையாளருமான திரு. கே. ஏ. செல்லையா நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

'போதனுமொழி விஷயத்தில் நாம் வேறுன கருத்தைக்கொண்டிருக்கின்றோம் இலங்கைத் தமிழ்ப்பிள்ளைகளின் போதனுமொழி ஆங்கிலமாகவிருக்கவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். ஆங்கில மொழியை கட்டாயபாடமாகக் கற்பித்தாலும் அம்மொழியில் பாண்டித்தியமடைய வேண்டுமானுல் வாரத்தில் ஐந்து நாட்களுக்கு, நாள் வீதம் 40 நிமிடம் கற்பித்து மாணவனைத் தேர்ச்சி பெறச்செய்யமுடியாது. இன்று நிலவும் ஆங்கில மொழிப் பயிற்சியின் தரக்குறைவு இதற்குச் சான்ருகும்' என்றும் அவர் நமது நிருபரிடம் கூறினர்.

# மூவாயிரம் மாணவ ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டனர்

### தோற்றியவர் 90,000 பேர்

கொழும்பு, திங்கள்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் நியமனம் செய்வதற்கென கல்வி அமைச்சு 3000மாணவ ஆசிரியர்களைத் தெரிவுசெய்துள்ளது. சிலகாலத்துக்கு முன் நடைபெற்றநேர்முகப்பரீட்சையிலும், எழுத்துப் பரீட்சையிலும் இவர்கள் பெற்ற புள்ளிகளைக் கொண்டே இத்தேர்வுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு 90,000 பேர்தோற்றினர். இவர்களில்நேர்முகப் பரீட்சைக்கு 20,000 பேர் அழைக்கப்பட்டனர். இறுதியில் 3,000 பேரே தெரிவுசெய்யப் பட்டனர். நியமனம் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டதற்கு இதுதான் காரணம் என்று கல்வி அமைச்சில் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆங்கில உதவி ஆசிரியர்களுக்குப் பெருந்தட்டுப்பாடுஇருந்தும், (ஆங்கில ஆசிரியர்களுக்கு 2000 காலிஸ்தானங்கள் உள்ளன) ஆக 290 பேரே கடந்த மாணவ ஆசிரியர் பரீட்சையில் தேறியுள்ளனர். இப்பரீட்சைக்கு தோற்றிய 90,000 பேரில் மொத்தம் 20,000 பேரே 30 புள்ளிகளிலும் அதிகமாக எடுத்துள்ளனர்.

இம்மாணவ ஆசிரியர்கள் அவரவர் தொகுதிகளுக்கு கரமையிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கே நியமனம் செய்யப்படுவர்.

வர்த்தகம், மனையியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்களிலும் [illegible] இலத்திரவியல் பாடங்களிலும் 6,000 மாணவ ஆசிரியர்கள் வரை தேவைப்படுவதாகக் கல்வி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். இம்மாணவ ஆசிரியர்கள், சென்ற மாதம் நடைபெற்ற பரீட்சையில் தோற்றிய 93,000 பேரிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

# காயம் விளைவித்த வழக்கில் 10 எதிரிகளும் விடுதலை

பருத்தித்துறை, திங்கள்

அந்தோனிடபிள்ளை, சகுணம்மா, கிலியன், பெர்னுண்டோ, அரியராஜா. தங்கராஜா, மைக்கேல், ஜெயராஜா, பேதுருப்பிள்ளை, அழகன் ஆகிய பத்து நபர்களும் இறிஸ்டி, துரைசிங்கம் ஆகிய இருவருக்கும் காயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதவான் கோர்ட்டில் திரு. ருெபேட் சில்வா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இறிஸ்டி சாட்சியமளிக்கையில் கூறப்பட்டதாவது: "நானும் எனது நண்பர்கள் சிலரும் சென்றல் தியேட்டரில் படம் பார்க்கச் சென்று கொண்டிருந்தோம். போகும் வழியில், முதல் ஐந்து எதிரிகளையும் சந்தித்தோம். முதலாவது எதிரி, "நீ ஒரு சண்டியனு?" என்று என்னைக் கேட்டுவிட்டு அடித்தார்.

இறிஸ்டியின் சாட்சியத்துக்கு முரண்பட்ட துரைசிங்கம் சாட்சியம் கூறியதன் பேரில், நீதவான் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

இந்த வழக்கின் அடிப்படைக் காரணம்அரசியல் போட்டியேஎன்றும், அதைக் கட்டுப்படுத்தாத வரைக்கும் உண்மையான குற்றவாளிகளைக் கோர்ட்டுக்குக் கொண்டுவர முடியாதென்றும், எதிரிகளைப் போன்ற அப்பாவிகளே கோர்ட்டில் ஆஜராக்கப்படுவரென்றும் எதிரிகளின் வழக்கறிஞர் திரு. வி. ரி. சுந்தரலிங்கம் தமது வாதத்தின் போது குறிப்பிட்டார்.

பருத்தித்துறைப் பொலிசார் வழக்கை நடத்தினர்.

---

## விமானப்படைக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் உதை பாந்தாட்டக் கோஷ்டிக்கும் இலங்கை விமானப்படை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான ஆட்டத்தில் விமானப்படைக் கோஷ்டி கடைசி நேரத்தில் கடுமையாக மோதி 5-0 கோல்களால் சென். பற்றிக்ஸ் கோஷ்டியைத் தோல்வியடையச் செய்தது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சிமெந்து தொழிற்சாலை ஊழியர் மரணமானர்

யாழ்ப்பாணம், செவ்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தபோது சூடான சிமெந்து கொட்டி உடல் வெந்து பலத்தகாயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 35 வயதுடைய தொழிலாளரான திரு. கி. தர்மலிங்கம் இன்று ஆஸ்பத்திரியில் மரணமானர்.

மேற்படி தொழிலாளர் சென்ற சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு ஆபத்தான நிலையில் கொண்டுவரப்பட்டார்.

---

## கடையுடைத்து திருடினர்களாம்

### இருவர் கைது

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூரில் கடையுடைத்து திருடியதாக சந்தேகத்தின் பேரில் இருவரை பொலிஸார் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர்களை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

நல்லூரில் உள்ள ஒரு கடையை உடைத்து திருடியதாக கணபதிபபிள்ளை, என்பவரையும் இரத்தினசிங்கம் அல்லது சின்னத்துரை என்பவரையும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

3-வது சந்தேக நபரை கைது செய்யாதபடியால் இருவரையும் ரிமாண்டில் வைக்கும்படி பொலிஸார் மாஜிஸ்திரேட்டிடம் கேட்டுக்கொண்டனர். அதனை ஏற்றுக் கொண்ட மாஜிஸ்திரேட் இருவரையும் ரிமாண்டில்வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் தலையசிங்கம் யோகநாதன் ஆஜரானர். மீண்டும், இம்மாதம் 21-ம் தேதி சந்தேக நபர்களை ஆஜார் செய்யும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டின்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்கோவில் ரேவீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர்மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org